


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 177 08.02.2026 ஞாயிற்றுக்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 177 | Sunday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

# இந்தியா மீதான 25% வரியை ரத்து செய்யும் உத்தரவில் கையெழுத்திட்டார் டிரம்ப்!

**வாஷிங்டன்,பிப்.8:**

இந்தியா மீதான 25 சதவிகித அபராத வரியை ரத்து செய்யும் உத்தரவில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் சனிக்கிழமை கையெழுத்திட்டார்.

ரஷியாவிடம் இருந்து தொடர்ந்து இந்தியா எண்ணெய் வாங்கி வருவதைக் கண்டித்த அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், முதலில் 25 சதவிகித வரியையும் பின்னர் கூடுதலாக 25 சதவிகித அபராத வரியையும் விதித்திருந்தார்.

அதன் பின்னர், இந்திய- அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுவிட்டதாகவும், இந்தியா மீதான 25 சதவிகித அபராத வரியை 18 சதவிகிதமாக குறைப்பதாகவும் அமெரிக்க அதிபர் டிரம்ப் கடந்த திங்கள்கிழமை (பிப். 2) தெரிவித்திருந்தார். இந்த நிலையில், ரஷிய எண்ணெய் வாங்குவதற்கு எதிராக இந்தியா மீது விதித்த 25 சதவிகித அபராத வரியை ரத்து செய்யும் உத்தரவில் அதிபர் டிரம்ப் சனிக்கிழமை கையெழுத்திட்டார்.

இந்தியா மீண்டும் ரஷியாவிடமிருந்துஎண்ணெய்யை வாங்கினால் கடுமையான வரிகள் விதிக்கப்படும் என்றும், அமெரிக்காவிடம் எண்ணெய் வாங்க ஒப்புக்கொண்டது. இதனால் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் உத்தவின் மூலம் இந்தியா மீது இருந்த வரி தற்போது 18 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.



இதைத் தொடர்ந்து, ரஷியாவிடம் இருந்து எண்ணெய் வாங்கியதால் கூடுதலாக விதிக்கப்பட்ட 25% வரி ரத்து செய்யப்படுவதாகவும், இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் குறித்து இந்தியா - அமெரிக்கா கூட்டறிக்கை வெளியிட்டுள்ளது. இதுகுறித்து மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், இந்தியா - அமெரிக்காவுடன் ஒரு இடைக்கால ஒப்பந்தம் செய்திருக்கிறது. இது இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு, குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு இந்திய சந்தையில் 30 டிரில்லியன் டாலர் அளவுக்கு பயனளிக்கும்.இந்தியாவில் ஏற்றுமதி அதிகரிக்கப்பட்டால் பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் லட்சக்கணக்கான புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும்" எனக் குறிப்பிட்டுள்ளார். ஜவுளி, தோல் பொருள்கள், கைவினைப் பொருட்கள், வீட்டு அலங்காரப் பொருட்கள் மீதான அமெரிக்காவின் வரிகள் 18%ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இந்திய மருந்துப் பொருள்கள், ஆபரணங்கள் போன்றவற்றுக்கு பூஜ்ஜிய வரி விதிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்திய விவசாயிகளின் நலனைக் காக்க, விவசாய மற்றும் பால் பண்ணை பொருட்களுக்கு இந்த ஒப்பந்தத்தில் முழு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்திய விமானப் பாகங்களுக்கு விலக்கு அளிக்கவும் அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் சுமார் 500 பில்லியன் டாலர் அளவுக்கு அமெரிக்காவிலிருந்து எரிசக்தி மற்றும் தொழில்நுட்பப் பொருள்களை இறக்குமதி செய்யவும் இந்தியா ஒப்புதல் அளித்திருக்கிறது.

## வர்த்தக ஒப்பந்தத்தால் வேலை வாய்ப்புகள் பெருகும்: டிரம்புக்கு நன்றி: பிரதமர் மோடி

**புதுடெல்லி,பிப்.8:**

இந்தியா- அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான கூட்டறிக்கை வெளியாகியுள்ள நிலையில், இந்த ஒப்பந்தம் இளைஞர்கள், பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை பெருக்கும் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது:

- இந்தியா - அமெரிக்கா இடையே இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்திற்கான கட்டமைப்பில் ஒப்புதல் கிடைத்துள்ளது. இரு நாடுகளுக்கிடையிலான வலுவான உறவுகளுக்கு தனிப்பட்ட அர்ப்பணிப்புடன் செயல்பட்ட அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பிற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கட்டமைப்பு, இந்தியா அமெரிக்கா கூட்டுறவின் ஆழமான நம்பிக்கை மற்றும் இயக்கத்தன்மை தொடர்ந்து வளர்ந்து வருவதை பிரதிபலிக்கிறது. 'மேக் இன் இந்தியா' முயற்சியை மேலும் வலுப்படுத்தும் இந்த ஒப்பந்தம், இந்திய விவசாயிகள், தொழில்முனைவோர், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME),




ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள், மீனவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குகிறது. இதன் மூலம் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு பெருமளவில் வேலைவாய்ப்புகள் உருவாகும்.

மேலும், நம்பகமான மற்றும் தாங்கும்திறன் கொண்ட வினியோக சங்கிலிகளை வலுப்படுத்துவதோடு, உலகளாவிய பொருளாதார வளர்ச்சிக்கும் இந்த கட்டமைப்பு பங்களிக்கும். 'வளர்ந்த பாரதம்' நோக்கி இந்தியா முன்னேறிக் கொண்டிருக்கும் நிலையில், எதிர்காலத்தை நோக்கிய, மக்களை வலுப்படுத்தும் மற்றும் பகிர்ந்த வளமையை உருவாக்கும் உலகளாவிய கூட்டாண்மைகளை உருவாக்குவதில் இந்தியா தொடர்ந்து உறுதியாக இருக்கும்" இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

## எம்.என்.ராஜம், எஸ்.பி முத்துராமனுக்கு கலைத்துறை வித்தகர் விருது





**சென்னை,பிப்.8:**

பழம்பெரும் நடிகை எம்.என்.ராஜம் மற்றும் இயக்குநர் எஸ்பி முத்துராமனுக்கு கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் திரையுலகில் சிறந்து விளங்கும் வாழ்நாள் சாதனையாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கடந்த 2022-ல் அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து 2022-ம் ஆண்டில் வசனகர்த்தா ஆரூர்தாஸுக்கும், 2023-ல் கவிஞர் மு.மேத்தாவுக்கும், கலைஞர் கருணாநிதி நூற்றாண்டையொட்டி பின்னணிப் பாடகி சுசீலாவுக்கும் இந்த விருது வழங்கப்பட்டது.

இந்நிலையில் 2024-ம் ஆண்டுக்கான கலைத்துறை வித்தகர் விருதுக்கு பழம்பெரும் நடிகை எம்.என்.ராஜமும், 2025-ம் ஆண்டுக்கான விருதுக்கு திரைப்பட இயக்குநர் எஸ்பி.

முத்துராமனும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவருக்கும் ரொக்கப்பரிசாக தலா ரூ.10 லட்சமும், நினைவுப் பரிசும் வழங்கப்படும். இதற்கான விருது வழங்கும் விழா முதல்வர் தலைமையில் விரை வில் நடைபெற உள்ளது.

## நல்ல பழக்கங்கள் தேர்வுகளை எதிர்கொள்ள உதவும்

### பள்ளி மாணவர்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி அறிவுரை





**திருவள்ளூர்,பிப்.8:**

நல்ல பழக்கங்கள், கடினமான தேர்வுகளை எதிர்கொள்ள உதவும் என்று ஆளுநர் ஆர்.என்.ரவி கூறினார். பள்ளி மாணவர்களிடம் மன அழுத்தம் இல்லாத சூழலை உருவாக்க பிரதமர் மோடி தலைமையில் 'தேர்வு வீரர்கள்' என்ற இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த இயக்கம் சார்பில் 'பரிக்ஷா பே சர்ச்சா' என்ற நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இதன் படி, திருவள்ளூர் மாவட்டம் திருவேற்காடு பகுதியில் உள்ள ஆர்எம்கே பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆளுநர் ஆர்.என்.ரவி சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று, 1,500-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடினார்.

அப்போது ஆளுநர் பேசியதாவது: மாணவ, மாணவிகள் அதிகாலையில் எழுந்து, உடற்பயிற்சி, யோகா செய்ய வேண்டும். தினமும் கடினமான பாடங்களைப் படிக்க வேண்டும். நல்ல பழக்கங்கள், கடினமான தேர்வுகளை எதிர் கொள்ள உதவியாக இருக்கும்.

வினாத்தாளை வாங்கியதும், தெரியாத கேள்விகளைப் பார்த்து பதற்றப் படக் கூடாது. நாம் நினைத்தது நடைபெறாவிட்டால், அதை தோல்வியாக கருதக் கூடாது. சிறு பின்னடைவாக கருத வேண்டும்.

மீண்டும் முயற்சி செய்து, நினைத்ததை முடிக்கவேண்டும். சாதனையாளர்களின் சுயசரிதையைப் படித்து, அதை ஊக்கமாக எடுத்துக் கொள்ளுங்கள்.இவ்வாறு அவர் பேசினார்.தொடர்ந்து, தேர்வை தைரியமாக எதிர்கொள்வது குறித்து பிரதமர் மோடி எழுதிய 'தேர்வு வீரர்கள்' என்ற புத்தகத்தை, மாணவ, மாணவிகளுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி வழங்கினார்.

## மணிப்பூரில் குக்கி இன மக்கள் போராட்டம்

**மணிப்பூர்,பிப்.8:**

மணிப்பூரில், கடந்த 2023-ம் ஆண்டு மே மாதம் மெய்தி இன மக்களுக்கும். குக்கி பழங்குடியின மக்களுக்கும் இடையே கலவரம் வெடித்தது. இந்த கலவரத்தில் 260 பேர் பலியானார்கள். கலவரம் நீடித்ததால், பைரேன்சிங் தலைமையிலான பா.ஜனதா அரசு கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் பதவி விலகியது. அதையடுத்து ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டது. சட்டசபை முடக்கி வைக்கப்பட்டது.

இந்நிலையில், ஆட்சி அமைப்பு பணிக்கு தங்கள் இன எம்.எல்.ஏ.க்கள் உதவியதை கண்டித்து குக்கி, ஜோ ஹமர் பழங்குடியினத்தினர் பெரும்பான்மையாக வசிக்கும் சுரசந்த்பூர் மாவட்டத்தில் நேற்று முழு அடைப்பு நடத்தப்பட்டது. இதனால் சுரசந்த்பூர் மாவட்டத்தில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. முழுஅடைப்பு ஆதரவாளர்கள், கைகளில் கட்டைகளை ஏந்திக்கொண்டு மாவட்ட தலைநகரில் வாகனங்களை தடுத்து நிறுத்தினர்.

கும்பல் கற்களை வீசியது. அதனால், பாதுகாப்பு படையினர் தடியடி நடத்தியும், கண்ணீர்புகை குண்டுகளை வீசியும் கும்பலை கலைத்தனர். நேற்று அதிகாலைவரை மோதல் நீடித்தது. 2 பேர் காயம் அடைந்தனர்.

## டீன் ஏஜ் பெண்ணின் கருவை கலைக்க உச்ச நீதிமன்றம் அனுமதி

**புதுடெல்லி,பிப்.8:**

மகாராஷ்டிராவில் வசிக்கும் 17 வயது சிறுமி, பக்கத்து வீட்டு நண்பருடன் பழகி கர்ப்பமானார். அவர் தற்போது 30 வார கருவை வயிற்றில் சுமக்கிறார். தற்போது அவருக்கு 18 வயது 4 மாதங்கள் ஆகிறது. சட்டவிரோதமாக பிறக்கும் இந்த குழந்தையை பெற்றெடுக்க, டீன் ஏஜ் பெண்ணுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் விருப்பம் இல்லை.

இதனால் கருவை கலைக்க உச்ச நீதிமன்றத்தில் மனு செய்தனர். இதை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பிவி நாகரத்தினா, உஜ்ஜல் புயான் ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று விசாரித்தது. அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் கூறியதாவது:

தவிர்க்க முடியாத சூழலால் கருவுற்றதே தற்போதைய பிரச்னையாக உள்ளது. டீன் ஏஜ் பெண், குழந்தை பெற்று தாயாக விரும்பாததையும் பரிசீலிக்க வேண்டியுள்ளது. இன்னும் பிறக்காத ஒரு குழந்தை வயிற்றில் இருக்கும்போது, அந்த தாயின் உரிமையே மேலானது.



மொத்தத்தில் கருவை சுமக்க விரும்பவில்லை என்பதால், அனைத்து மருத்துவ பாதுகாப்புகளை பின்பற்றி, இச்சிறுமியின் 30 வார கருவை கலைக்க மும்பை ஜே.ஜே. மருத்துவமனைக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(8-02-2026)
விசுவாவசு ஆண்டு, தை -25
பிறை: தேய்பிறை
திதி
சப்தமி (முழுவதும்).
நட்சத்திரம்:
சுவாதி (முழுவதும்)
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
மாலை 4.30-6.00 மணி.
எமகண்டம்
நண்பகல் 12.00-1.30 மணி.
சூலம் - மேற்கு.
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 3-4 மணி

| | |
|---|---|
| மேஷம் | போட்டி |
| ரிஷபம் | செலவு |
| மிதுனம் | நற்செயல் |
| கடகம் | ஆதரவு |
| சிம்மம் | புகழ் |
| கன்னி | சாதனை |
| துலாம் | உற்சாகம் |
| விருச்சிகம் | ஜெயம் |
| தனுசு | ஆதாயம் |
| மகரம் | சாந்தம் |
| கும்பம் | லாபம் |
| மீனம் | வரவு |

## தமிழகத்தில் ஒரே மாதத்தில் 1,500 பேருக்கு டெங்கு காய்ச்சல்






**சென்னை,பிப்.8:**

தமிழகத்தில் ஒரே மாதத்தில் 1,500 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் 1,500 பேர் வரை டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளனர். டெங்கு பரவலை தடுக்க மாநில முழுவதும் கொசு ஒழிப்பு பணி தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறும்போது, "தமிழகத்தில் கடந்த ஆண்டு 25,521 பேர் டெங்கு காய்ச்லால் பாதிக்கப்பட்டனர். 12 பேர் உயிரிழந்தனர். தற்போது அதிகரித்துள்ள பாதிப்பு 2 மாதத்தில் குறையும்.

டெங்கு மட்டுமின்றி மலேரியா, சிக்குன்குனியா பாதிப்பு ஏற்பட்டால், அலட்சியமாக இல்லாமல் உடனே சிக்சிசைபெற வேண்டும். கொசு ஒழிப்புபணிகள் தீவிரமாக நடக்கிறது. பொதுமக்களும் வீடுகள் மற்றும் சுற்றுப் புறங்களிலும் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றனர்.

## பள்ளிக்கு நல திட்ட உதவி வழங்கும் விழா



**தூத்துக்குடி ,பிப்.08:**
தூத்துக்குடி மாவட்டம் கருங்களம் ஊராட்சி ஒன்றியம் முறப்பநாடு கிராமத்தில் கடந்த நூற்றாண்டாக செயல்பட்டு வரும் பள்ளியில் பயிலும் ஆண்டு தோறும் மாணவ மாணவிகளுக்கு அழகிரிசாமி அறக்கட்டளை மூலம் நல திட்ட உதவிகள் வழங்கி வருகிறது . இந்த ஆண்டும் உதவி வழங்கும் விழா சமீபத்தில் நடைபெற்றது.

விழாவில் அறக்கட்டளை நிர்வாகிகள் திரு ஜானகிராமன் திரு ராதாகிருஷ்னன், திரு லோகராஜ், திரு சேகர் மற்றும் தொழிலதிபர் திரு பார்த்தசாரதி வழக்கறிஞர் திருமதி தீபா கலந்து கொண்டனர்.

விழாவுக்கு வந்தவர்களை முன்னாள் ஊராட்சி துணைத்தலைவர் திரு சுப்பிரமணியன் வரவேற்றார் தலைமையாசிரியை திருமதி பாண்டிமாதேவி நன்றி தெரிவித்தார்.

**செய்திபடம்:சுந்தரிகாந்தி முறப்பநாடு**

## செய்யாறில் திருக்குறள் திருப்பணிகள் திட்டத்தின் கீழ் 18 வது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு



**செய்யாறு,பிப் .08:**
திருவண்ணாமலை மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் திருக்குறள் திருப்பணிகள் திட்டத்தின் கீழ் செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 18 ஆவது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு திருக்குறள் பயிற்சியாளர் கவிஞர் எறும்பூர் கை. செல்வகுமார் தலைமை தாங்கி , பயிற்சி அளித்தார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தலைமை ஆசிரியர் ஆர். தேன்மொழி தமிழின் சிறப்புகள் குறித்து பேசினார். 25 மாணவிகள், 8 மாணவர்கள், பயிற்சியாளர் ஒருவர் ,சிறப்பு அழைப்பாளர் ஒருவர், பெரியவர்கள் இரண்டு பேர், உள்ளிட்ட நேற்றைய பயிற்சி வகுப்பில் 37 பேர் கலந்து கொண்டனர்.

## மாரநாடு கருப்பண்ணசாமி கோவிலில் முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்பி சுவாமி தரிசனம்





**மானாமதுரை, பிப்.08:**
சிவகங்கை மாவட்டம் திருப்பாச்சேத்தி அருகே அமைந்துள்ள தென் மாவட்டங்களில் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீமாரநாட்டு கருப்பண்ணசாமி ஆலயத்தில் முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் எம்பி அவர்கள் சுவாமி தரிசனம் செய்தார்கள்.

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளர் பச்சேரி சிஆர். சுந்தரராஜன் , சிவகங்கை மாவட்ட காங்கிரஸ் தலைவர் சஞ்சை உடன் இருந்தனர்.

## பிரேமலதா விஜயகாந்த் பற்றி அவதூறு: டி.ஜி.பி. அலுவலகத்தில் தே.மு.தி.க. புகார்



**சென்னை, பிப்.08:**
தே.மு.தி.க. தலைமை நிலைய செயலாளர் முன்னாள் எம். எல்.ஏ. பார்த்தசாரதி சார்பில், தே.மு.தி.க. வழக்கறிஞர் அணி மாநிலச் செயலாளர் சந்தோஷ்குமார் டி.ஜி.பி அலுவலகத்தில் புகார் மனு ஒன்றை அளித்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது:-

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், மறைந்த தலைவர் விஜயகாந்த் ஆகியோர் பற்றியும் தே.மு.தி.க. பற்றியும் யூடியூப் தளங்களில் சிலர் வாய்க்கு வந்தபடி பேசி வருகிறார்கள்.

இத்தகைய அவதூறு பேச்சுகள், தே.மு.தி.க. தொண்டர்களின் மனதில் பெரும் வேதனையையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

தே.மு.தி.க. தொண்டர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்குடன் செயல்படுகின்ற திருச்சி சூர்யா, தமிழா தமிழா, பாண்டியன், சவுக்கு சங்கர் உள்ளிட்ட யூடியூபர்கள் மீதும், யூடியூப் சேனல்கள் மீதும் குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சம்வஸ்ராபிஷேக தினம் சோடஷ ஸ்வாமி அம்பாள் சமேத தேவதாதம்பதி பூஜை









**கடலூர், பிப்.08:**
கடலூர் மாவட்டம் புவனகிரி கடைவீதியில் அருள் பாலித்து வரும் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் சம்வஸ்ராபிஷேக தினத்தை முன்னிட்டு சோடஷ ஸ்வாமி அம்பாள் தேவதா தம்பதி பூஜைகள் காலை 6:30 மணிக்கு பஜனைமடம் விநாயகர் ஆலயத்தில் இருந்து பால்குடம் ஊர்வலமாக எடுத்து வந்து வாசவி அம்மன் சன்னதி அடைதல் அதனைத் தொடர்ந்து அம்பாளுக்கு மகாபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு சோடஷ ஸ்வாமி அம்பாள் ஸமேத தேவாதம்பதிகள் பூஜைகள் ஆவஹணமும், 1. சித்தி புத்தி ஸமேத விநாயகர்,2. வள்ளி தேவசேனா ஸமேத சுப்பிரமணியர்,3. மீனாட்சி ஸமேத சுந்தரேஸ்வரர்,4. காசி விசாலாட்சி ஸமேத விஸ்வநாதர்,5. பார்வதி ஸமேத சிவன்,6. சிவகாமி ஸமேத நடராஜர்,7. ஏழை வார்குழலி ஸமேத ஏகாம்பரேஸ்வரர், 8. அலமேலு மங்கை ஸமேத வெங்கடாஜலபதி , 9. ராதா ஸமேத கிருஷ்ணன் , 10. ருக்மணி ஸமேத பாண்டுரங்கன்,11. சீதா ஸமேத ராமர் , 12. ஆண்டாள் சமேத ரங்கமன்னார், 13. லஷ்மி ஸமேத நரசிம்மர்,14. மஹா லஷ்மி ஸமேத விஷ்ணு, 15. சரஸ்வதி ஸமேத பிரம்மன்,16. ஹயக்ரீவர் ஸமேத லக்ஷ்மி 16 சோடஷம் தேவதா தம்பதி பூஜைகள் மூலவர், உற்சவர் சிறப்பு வண்ணமலர் மாலைகளால் அலங்காரத்துடன், தங்க கவசத்துடன் மகா தீபாராதனையும், 16 பூஜைகளும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் காலை, மதியம் உணவு வழங்கப்பட்டது. இவ்விழாவினை ஏற்பாடு செய்தவர்கள் :ஆர்ய வைஸ்ய மகாசபை புவனகிரி.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## முழு ஆண்டு தேர்வு எழுதும் மாணவ, மாணவிகளுக்கு ஸ்ரீ வனதுர்கா பீடத்தில் எழுதுகோல்கள் வழங்கல்!



**வேலூர், பிப்.08:**
வேலூர் அடுத்த இறைவன்காடு ஸ்ரீ வனதுர்கா பீடம் சரஸ்வதி தேவஸ்தானத்தில் வேலூர் வி .வி.கே.என்.எம்.சீனியர் செகண்டரி சிபிஎஸ் பள்ளியில் முழு ஆண்டு தேர்வு எழுதும் மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

இதையடுத்து மாணவச் செல்வங்களுக்கு நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்வில் வெற்றி பெற பிரார்த்தனை செய்யப்பட்டு அவர்களுக்கு ஸ்ரீமகா சரஸ்வதி தேவியின் அருள்பிரசாதமாக எழுதுகோல்கள் மற்றும் பிரசாதங்கள் ஸ்ரீ துர்கா அம்மா மூலமாக ஆசிர்வதித்து வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் போது பள்ளி முதல்வர் சுஜாதா மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தமிழகத்தில் சஸ்பெண்டு செய்யப்பட்டுள்ள 202 போலீசார் மீதான நடவடிக்கை ரத்தாகிறது

**சென்னை, பிப்.08:**
தமிழகம் முழுவதும் காவல்துறை பணியின் போது முறைகேட்டில் ஈடுபட்டது மற்றும் கவன குறைவாக செயல்பட்டது ஆகிய காரணங்களுக்காக போலீசார் மீதும் அதிகாரிகள் மட்டத்தில் இருப்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.

மாநிலம் முழுவதும் இதேபோன்று 439 பேர் சஸ்பெண்டு நடவடிக்கை காரணமாக போலீஸ் பணியில் இல்லாமல் உள்ளனர்.

அதே நேரத்தில் இவர்களுக்கு சஸ்பெண்டு காலத்தில் வழங்கக்கூடிய குறைந்தபட்ச ஊதியமும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது.

இதனை கருத்தில் கொண்டு நீண்ட நாட்களாக சஸ்பெண்டு நடவடிக்கையில் இருந்து வரும் 202 போலீசார் மீதான சஸ்பெண்டு நடவடிக்கையை விடுவிப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக போலீஸ் டிஜிபி வெங்கட்ராமன், அனைத்து காவல் துறை உயர் அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி இருக்கிறார்.

இதன்படி நடவடிக்கையில் உள்ள 200க்கும் மேற்பட்ட போலீசார் பணிக்கு திரும்பும் சூழல் ஏற்பட்டு உள்ளது.

## இடைக்காட்டூர் திரு இருதய ஆண்டவர் திருத்தலத்தில் கூட்டு பிரார்த்தனை திருப்பலி



**மானாமதுரை, பிப்.08:**
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள இடைக்காட்டூர் சுற்றுலா தலம். இங்கு 140 ஆண்டுகள் புகழ்பெற்ற திரு இருதய ஆண்டவர் திருத்தலம் உள்ளது. இங்கு ஆங்கில மாதத்தின் முதல் வெள்ளி சிறப்பு வெள்ளியாக கருதப்பட்டு கூட்டு பிரார்த்தனை திருப்பலி நடைபெறும்.

இதில் தமிழகம் மற்றும் கேரளா பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்வார்கள். பிப்ரவரி மாத முதல் வெள்ளி வழிபாடு, ஏராளமானோர் பங்கேற்றனர்.

காலையில் நடைபெற்ற திருப்பலியை அமெரிக்காவில் பணிபுரியும் ஆனந்த் தலைமையில் பாதிரியார்கள் புருனோ அந்தோணி, ரொசேரியன் சபையினர் நடத்தினர்.

இதனைத்தொடர்ந்து திருச்சி மறை மாவட்ட பாதிரியார் ஆல்பர்ட் தலைமையில் பாதிரியார் கள் ஜோசப் சேவியர், வின்சென்ட், ஆரோக்கியராஜா, இனிகோ சேவியர். பாக்கியராஜ். னந்தம், ஓனாசிஸ், புஷ்ப ராஜ், தாமஸ், அந்தோணி ரமேஷ்,சேவியர் ஆரோக் கியசாமி திருப்பலி பூஜையை நடத்தினார்கள்.

இதில் இதய நோயாளி கள் பூரண குணம் அடைய வேண்டியும், உலக மக்கள் அமைதி வேண்டியும் சிறப்பு கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது.

அதேபோல் மாலை 6 மணிமுதல் 8 மணிவரை நன்றி செலுத்தும் திருப்பலி நடைபெற்றது. ஏற்பாடுகளை திருத்தல அருட் பணியாளர் ஜான் வசந்தகுமார் செய்து இருந்தார்.

## வர்த்தக ஒப்பந்தம்: டிரம்புக்கு அதிகாரத்தை வழங்கினாரா மோடி? – சு. வெங்கடேசன்

ரஷிய எண்ணெய் வாங்குவதற்கு எதிராக இந்தியா மீது விதித்த 25% அபராத வரியை ரத்து செய்யும் உத்தரவில் அமெரிக்க அதிபர் டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

இந்தியா மீண்டும் ரஷிய எண்ணெயை வாங்கினால் வரிகள் விதிக்கப்படும் என்றும், அமெரிக்காவிடம் எண்ணெய் வாங்க ஒப்புக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இந்தியா மீது 50%ஆக இருந்த வரி தற்போது 18% குறைக்கப்பட்டுள்ளது. இருநாட்டு வர்த்தக ஒப்பந்தம் குறித்த கூட்டறிக்கையும் வெளியானது. இடைக்கால ஒப்பந்தம் குறித்த கூட்டறிக்கையை அமெரிக்கா சார்பில் வெள்ளை மாளிகை வெளியிட்டது.

இந்நிலையில், வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான கூட்டறிக்கையை விமர்சித்து மதுரை எம்.பி. சு. வெங்கடேசன் விமர்சித்து தந்து எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அவரது பதிவில், "இந்தியா - அமெரிக்கா நாடுகளுக்கிடையேயான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான கூட்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியப் பொருட்கள் மீது அமெரிக்க 18% வரிவிதிக்கும் என்றும் அமெரிக்கப் பொருட்கள் குறிப்பாக உணவு மற்றும் வேளாண் பொருட்களுக்கு வரி முற்றிலும் நீக்கப்படும் அல்லது குறைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பியுஷ் கோயல் தனது பதிவில் சோளம், கோதுமை, சோயா, அரிசி பால், சில இறைச்சி உள்ளிட்டவற்றை உற்பத்தி செய்யும் இந்திய விவசாயிகள் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கிறார். ஆனால், கூட்டறிக்கையில் *wide range of* உணவு மற்றும் வேளாண் பொருட்களுக்கான வரி நீக்கப்படும் அல்லது குறைக்கப்படும் என்றுதான் குறிப்பிட்டுள்ளது. அதேநேரத்தில் ரஷ்ய எண்ணெய்யை வாங்க மாட்டோம் என ஒப்புக்கொண்டதால்தான் 25% வரியை நீக்குகிறேன், எண்ணெய் வாங்குவது தெரியவந்தால் மீண்டும் வரிவிதிப்பேன் என தனது உத்தரவில் மிரட்டுகிறார் ட்ரம்ப். இந்தியாவின் வர்த்தக உறவுகளைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை ட்ரம்புக்கு வழங்கினாரா பிரதமர் மோடி?

இதை இந்தியாவுக்குச் சாதகமான ஒப்பந்தம் எனக் கொண்டாடுபவர்கள் வெட்கப்பட வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

## திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோவிலில் பாண்டிய பேரரசர் மாறவர்மன் விக்கிரம பாண்டிய தேவர் பிறந்தநாள் விழா



**நெல்லை,பிப் .08:**
திருநெல்வேலிநெல்லையப்பர் திருக்கோவிலில், பாண்டிய பேரரசர் மாறவர்மன் விக்கிரம பாண்டிய தேவர் (கி.பி. 12831318) அவர்களின் பிறந்தநாள் விழா, ‘பாண்டியர்கள் தேடி பயணம்’ வரலாற்று ஆய்வு குழு சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் வரலாற்று ஆய்வாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு, பாண்டிய பேரரசின் மறைக்கப்பட்ட மகாவீரரான மாறவர்மன் விக்கிரம பாண்டிய தேவரின் வரலாற்றுப் பெருமைகளை நினைவுகூர்ந்தனர்.

பாண்டிய பேரரசின் கடின காலத்தின் காவலன் மாறவர்மன் விக்கிரம பாண்டிய தேவர், குலசேகர பாண்டியனின் தம்பியாகவும், அவனுடன் சமகால அரசராகவும் விளங்கியவர். பாண்டிய பேரரசின் இறுதிக்கால அரசியல், போர், சமய மற்றும் நிர்வாக வரலாற்றில் முக்கிய இடம் பெற்ற மாமறவன் ஆவார். திருவெண்ணெய் நல்லூரில் கிடைத்த கல்வெட்டு, இவர் தை மாதம் அஸ்த (Hasta) நட்சத்திரத்தில் பிறந்தவர் என்பதை உறுதிப்படுத்துகிறது. இவரது மனைவியாக உலகமுழுதுடையாள் தேவியார் குறிப்பிடப்படுகிறார்.

முடிசூட்டும் விழாக்கள் வரலாற்றுச் சான்றுகள் விக்கிரம பாண்டிய தேவர் ரோகிணி நட்சத்திர நாளில் முடிசூட்டிக் கொண்டதாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இதனை நினைவுகூரும் வகையில், ‘விக்கிரம பாண்டியன் சந்தி’ என்ற விழா ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. மேலும், அவர் பெற்றிருந்த ‘ராஜாக்கள் நாயன்’ என்ற பட்டத்தின் அடிப்படையில், வைகாசி மாதம் அத்தநாளில் திருவேந்திபுரம் கோயிலில் ‘ராஜாக்கள் நாயன் சந்தி’ விழாவும் நடைபெற்றது.

அரசப் பிரதிநிதி பாண்டியத் தொண்டைமான் குலசேகர பாண்டியனின் இறுதிக் காலத்தில், விக்கிரம பாண்டிய தேவர் தொண்டை மண்டலம், நடுநாடு மற்றும் கொங்கு நாட்டின் கிழக்குப் பகுதிகளில் அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்.

இராசிபுரம் கைலாசநாதர் கோயில் கல்வெட்டில், அவர் ‘பாண்டியத் தொண்டைமான்’ என குறிப்பிடப்படுகிறார். போர் நடவடிக்கைகள் மற்றும் வெற்றிகள் விக்கிரம பாண்டிய தேவர் பல போர்களில் பாண்டிய நாட்டின் வலிமையை நிலைநாட்டினார். வேணாடு (திருவாங்கூர்) வெற்றி பொதிய மலைப் பகுதியை கைப்பற்றி பாண்டிய ஆட்சிக்குட்படுத்தினார்.

காகதீயர் மீது போர் காகதீய வேந்தன் வீராண்ட கோபாலனை வீழ்த்தி, ‘புவனேக வீரன்’ என்ற பட்டம் பெற்றார். சோழர்களை முறியடித்தல் வெள்ளாற்றங்கரையில் நடைபெற்ற போரில் சோழர்களை தோற்கடித்ததாகச் செய்யுள் சான்றுகள் தெரிவிக்கின்றன. மாலிக் கபூர் படையெடுப்பு காலத்தில் பாண்டிய நாட்டின் காவல் மாலிக் கபூரின் படையெடுப்பால் தென்னிந்தியா சீரழிந்த காலகட்டத்தில், பாண்டிய நாடு முழுமையாக அழியாமல் தப்பியதற்கு முக்கிய காரணியாக விக்கிரம பாண்டிய தேவர் விளங்கினார்.

வயது முதிர்ந்த நிலையிலும், சரியான வியூகங்களை வகுத்து, கொங்கு நாட்டிலிருந்து காவிரிக் கரை வரை பாண்டிய ஆட்சிப் பகுதிகளை பாதுகாத்தார். சமயப் பொறை மற்றும் நிர்வாகத் திறன் ‘எம்மதமும் சம்மதம்’ என்ற கொள்கையுடன் ஆட்சி செய்த விக்கிரம பாண்டிய தேவர், சிவன் கோயில்கள் சமணப் பள்ளிகள் திருமால் கோட்டங்கள் ஆகிய அனைத்திற்கும் இறையிலி நிலங்களை வழங்கினார். சமயப் பொறையுடன் கூடிய அவரது ஆட்சி, மக்களுக்கு அமைதியையும் பாதுகாப்பையும் வழங்கியது.

இறுதி நாட்கள் கி.பி. 1296க்குப் பின், திருநெல்வேலி பகுதியில் விக்கிரம பாண்டிய தேவர் தங்கி இருந்திருக்கலாம் என கல்வெட்டுகள் சுட்டிக் காட்டுகின்றன.

அரசப் பொறுப்பிலிருந்து விலகிய பின்னரும், பாண்டிய நாட்டின் நலனில் அவர் அக்கறை கொண்டிருந்தார். வரலாற்று நினைவுகூரல் இன்றைய பிறந்தநாள் விழாவில், மாறவர்மன் விக்கிரம பாண்டிய தேவர் ஒரு மன்னன் மட்டுமல்ல; ஒரு காவலன், ஒரு வியூக நிபுணன், ஒரு சமயப் பொறையாளர் என்பதை நினைவுகூர்ந்து உரைகள் நிகழ்த்தப்பட்டன. பாண்டியர் புகழ் வாழ்க! மாறவர்மன் விக்கிரம பாண்டிய தேவர் நினைவு என்றும் நிலைத்திருக்கட்டும்!


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250–Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 – Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com


S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


Breaking News Card.com
www.breakingnewscard.com
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
999 ONLY


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வாங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY OR SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale ..
Residential / Commercial ..
Plots
Flats
House
Villa
Bungalows
Farm Land
Ware Houses
Factory Sites
Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


CUSTOMIZED
MLM SOFTWARE
STARTS WITH
Rs.9999*
ONLY
BINARY PLAN
GENERATION PLAN
SINGLE LEG PLAN
MATRIX PLAN
CRYPTOCURRENCY
CONTACT
9445242169


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC - INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

## கவிதை அரங்கம்!




பிரச்சினைகள் நம்மை
செதுக்கவருவதாக
நினைத்து
எதிர் கொள்ளுங்கள்
சிதைந்து போகாதீர்கள்

மீண்டும் மீண்டும்
முயற்சி செய்யும் போது
வெற்றிக்கான சரியான
பாதையை கண்டு
பிடித்து விடலாம்

துன்பம் நம்மை சூழ்ந்த
போதும் மேகம் கலைந்த
வானமாய் தெளிவாகவே
இருப்போம்

வாழ்கையில் உன் மீது
உனக்கே நம்பிக்கை
இல்லை என்றால்
அந்த கடவுளே
நேரில் வந்தாலும்
பயன் இல்லை

## வாழ்க்கை தத்துவம்...



வெயிலில் சிதறும் நொடிகளும்
மழையில் மகிழும் தருணங்களும்
சேர்ந்து தான் வாழ்க்கை அமைகிறது

சிலர் விட்டுசெல்வதில்லை
சில நினைவுகள் விடாமல் தொடரும்
அதுவே வாழ்க்கை

வாழ்க்கை ஒரு வினாடி
தோல்வியாய் தோன்றலாம்
ஆனால் ஒவ்வொரு நாளும் ஒரு வாய்ப்பு

வாழ்க்கை குறுகியது
ஆனால் நினைவுகள் நீளமானவை

வியர்வை இல்லாமல்
உண்டான வெற்றிக்கு
நீண்ட நாள் வாசனை இருக்காது

## "முகம்"



டைரக்டர் கோகுல்ராஜா, இருபது ஆண்டுகளுக்குப் பிறகு தனது கிராமத்துக்குள் காலடி வைத்த போது, பள்ளி வாசலின் சிமெண்டு வாசனையே அவரை சிறுவயசுக்குத் திரும்பக் கொண்டு போனது.

தன் புதிய படத்தில் நடிக்க ஒரு சிறுவன் வேண்டும். "ஒப்பனையில்லா ஒரிஜினல் முகம்" . ஏனென்றால் அதுதான் கதையின் ஆணி வேர்.

"நான் படிச்ச இந்தப் பள்ளியிலிருந்து யாராவது கிடைச்சா மனசுக்கு நிறைவா இருக்கும்"என்று தன் ஆசையை ஹெட்மாஸ்டரிடம் சொல்லி விட்டு, வகுப்புகள் ஒவ்வொன்றாக பார்வையிட்டார். அனைத்து முகங்களிலும் ஒரே மாதிரியான பயிற்சி செய்யப்பட்ட சிரிப்பு. அழகான முடி. பொலிவான கண்கள். ஆனால்... அந்தச் செயற்கை அலங்காரங்கள் எதுவுமே அவர் மனசைத் தொடவில்லை.

அப்போது, பள்ளியின் பின்புறம், சாத்தப்பட்டிருந்த ஒரு வகுப்பறையிலிருந்து, ஒரு சிறுவனின் கத்தல் கேட்டது. "அது யார்?" கேட்டபடி டைரக்டர் நின்றார்.

ஹெட்மாஸ்டர் தடுமாறினார். "வேண்டாம் சார்... அந்தப் பையன் சரிப்பட்டு வர மாட்டான் சார்... அதனாலதான் உங்ககிட்ட காட்டாம பூட்டி வெச்சிட்டோம்."

"ஏன்?" கோகுல்ராஜாவின் குரல் மெல்லியதாய் இருந்தாலும், அதில் காட்டமும் இருந்தது.

"ப்ளீஸ் ஒப்பன் தி டோர்... நான் அவனைப் பார்க்கணும்" கத்தினார் டைரக்டர்.

வகுப்பின் கதவு திறக்கப்பட்டது.

உள்ளே நின்றிருந்த பையன் மெதுவாக வெளியே வந்தான். முகமெங்கும் தீக்காயத் தழும்புகள். உதடுகள் கோணல் மாணலாய். தலையிலே அங்கங்கே திட்டுத் திட்டாய் வெற்றிடங்கள்.

அவனைப் பார்த்ததும் மற்ற சிறுவர்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள்.

ஒரு நிமிடம் மயான அமைதி.

அடுத்த கணம் டைரக்டர் கை தட்டினார்.

"இவன்தான்.... இவனேதான்... நான் எதிர்பாக்கும் பையன்!"

அனைவரும் அதிர்ந்து பார்த்தார்கள்.

"என் கதையில வரும் பையனுக்கு தீ விபத்து நடக்கும்....அதுக்கப்புறம் அவன் முகம் இப்படித்தான் இருக்கும்... இதை எப்படிடா மேக்கப்ல கொண்டு வர்றதுன்னு யோசிச்சுட்டிருந்தேன்..."

அவர் பையனுக்கு அருகில் சென்று நின்றார்.

"இப்போ மேக்கப் தேவையே இல்லை! உண்மை இதுதான்.... ரியாலிட்டி இதுதான்."

பையன் மெதுவாக தலை நிமிர்ந்தான்.

அன்றைய தினம், டைரக்டர் வருகைக்காகவே அலங்கார மேக்கப் போட்டு வந்த மற்ற எல்லா சிறுவர்களின் முகத்திலும் ஈயாடவில்லை.

(முற்றும்)

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*ஐந்து வயது மகன்: அம்மா, ஐ லவ் யூ!*

*அம்மா: ஐ லவ் யூ டூ!*

*இருபது வயது மகன்: அம்மா, ஐ லவ் யூ!*

*அம்மா: என் கிட்ட காசு இல்லை. ஒழுங்கா கிளம்பு.*

## தினம் ஒரு சமையல்



### காட்டுயானம் அரிசி கஞ்சி

தேவையான பொருட்கள்:

* காட்டுயானம் அரிசி - 1/2 கப்
* தண்ணீர் - 4 டம்ளர்
* கறிவேப்பிலை - 1 கொத்து
* சின்ன வெங்காயம் - 8
* சீரகம் - 1/4 டீஸ்பூன்
* பச்சை மிளகாய் - 1
* கறிவேப்பிலை - 1 கொத்து
* தயிர் - 3/4 கப்
* பெருங்காயத் தூள் - 1/2 டீஸ்பூன்
* உப்பு - சுவைக்கேற்ப

செய்முறை:



* முதலில் காட்டுயானம் அரிசியை நீரில் கழுவி, உலர வைத்துக் கொள்ள வேண்டும்.

* அரிசியில் உள்ள ஈரப்பதம் போனதும், அதை மிக்சர் ஜாரில் போட்டு ஒன்றிரண்டாக அரைத்துக் கொள்ள வேண்டும். * பின்பு குக்கரில் அரைத்த காட்டுயானம் அரிசியைப் போட்டு, அத்துடன் தேவையான அளவு நீரை ஊற்றி, குக்கரை அடுப்பில் வைத்து, குக்கரை மூடி 5 விசில் விட்டு இறக்க வேண்டும். * விசில் போனதும் குக்கரைத் திறந்து, அதை நன்கு குளிர வைக்க வேண்டும்.


* பின் அதில் கஞ்சிக்கு தேவையான அளவு நீரை ஊற்றி, ஒரு கொத்து கறிவேப்பிலை சேர்த்து, மூடி வைத்து, இரவு முழுவதும் நொதிக்க வைக்க வேண்டும்.

* மறுநாள் காலையில் மிக்சர் ஜாரில் சின்ன வெங்காயம், சீரகம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை சேர்த்து நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும்.

* பின்பு அதில் தயிர், பெருங்காயத் தூள் சேர்த்து நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும்.

* பிறகு அரைத்ததை நொதிக்க வைத்த காட்டுயானம் அரிசி கஞ்சியுடன் சேர்த்து கலந்து, தேவையான அளவு நீரை ஊற்றி, சுவைக்கேற்ப உப்பு சேர்த்து கலந்தால், சுவையான காட்டுயானம் அரிசி கஞ்சி தயார்.

## பைன் மரம் பயன்கள்



பைன் மொட்டுகள் மற்றும் இலைகள்: மூச்சுக்குழாய் அழற்சி, இருமல், சளி மற்றும் தொண்டை மற்றும் சுவாசக் குழாயின் அழற்சி செயல்முறைகளுக்கு சிகிச்சையளிக்க உட்செலுத்துதல், சிரப்கள் மற்றும் உள்ளிழுக்கங்களில் பயன்படுத்தப்படுகிறது. போர்னியோல் மற்றும் சினியோல் போன்ற அத்தியாவசிய எண்ணெய்களில் இதன் செறிவானது சளி நீக்கி, பாக்டீரியா எதிர்ப்பு மற்றும் அழற்சி எதிர்ப்பு பண்புகளை வழங்குகிறது.

பிசின் மற்றும் அத்தியாவசிய எண்ணெய்கள்: கிருமி நாசினிகளாகவும், நறுமணக் குளியல்களிலும், சில சந்தர்ப்பங்களில், தோல் நிலைகள் மற்றும் சுவாச சிகிச்சைகளுக்கான மேற்பூச்சுப் பயன்பாடுகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

பைன் மர மேலாண்மை, மறு காடழிப்பு மற்றும் நிலைத்தன்மை

பைன் காடுகளின் நிலையான மேலாண்மைக்கு அவற்றின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு திட்டமிடல் தேவைப்படுகிறது. சுற்றுச்சூழல் மற்றும் உற்பத்தி செயல்பாடுகள், அத்துடன் பல்லுயிரியலைப் பாதுகாக்கவும், நிலப்பரப்பு ஒத்திசைவு மற்றும் தீ விபத்துகள் அதிகரிப்பது போன்ற எதிர்மறை தாக்கங்களைத் தவிர்க்கவும் பிற வகையான பூர்வீக தாவரங்களுடன் ஒருங்கிணைக்கவும். பல நாடுகளில், வனச் சான்றிதழ் அமைப்புகள் மரம் மற்றும் பிற பைன் பொருட்கள் இதிலிருந்து வருவதை உறுதி செய்கின்றன. பொறுப்பான தோட்டங்கள் மற்றும் நிலையான வனவியல்நவீன மறு காடழிப்பு உள்ளூர் இனங்கள் மற்றும் வகைகளுக்கு சாதகமாக உள்ளது, புவி வெப்பமடைதல் மற்றும் புதிய பூச்சிகளின் தோற்றம் போன்ற மாற்றங்களுக்கு சுற்றுச்சூழல் அமைப்புகளின் மீள்தன்மையை மேம்படுத்துகிறது.

உலகின் ஒவ்வொரு பகுதியும் உள்ளூர் காலநிலை மற்றும் மண்ணுக்கு ஏற்றவாறு பைன் இனங்கள் மற்றும் வகைகளின் செல்வத்தைக் கொண்டுள்ளன. ஐபீரிய தீபகற்பத்தில், அறிவியல் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட ஆறு பூர்வீக இனங்கள் தனித்து நிற்கின்றன. அமெரிக்கா, மெக்சிகோ மற்றும் மத்திய அமெரிக்காவிலும் பன்முகத்தன்மை அதிகமாக உள்ளது, மிதமான மற்றும் மிதவெப்ப மண்டல காடுகளில் பரவலாக பரவியுள்ள உள்ளூர் இனங்கள் மற்றும் பிற இனங்கள் உள்ளன.

## ஹீரோயின் ஆன பிக் பாஸ் ஜனனி.. யாருக்கு ஜோடியாகிறார் பாருங்க



பிக் பாஸ் 9ம் சீசனில் கலந்துகொண்ட பிரஜின் ஹீரோவாக 'ஊருக்கு ரெண்டு ஊதாரி' என்ற படத்தில் நடிக்கிறார். அதில் ஹீரோயினாக ஜனனி ஒப்பந்தம் ஆகி இருக்கிறார். விஜய் டிவி புகழ் காமெடியனாக நடிக்கிறாராம். இந்த படத்தின் பூஜை இன்று நடந்த நிலையில் அதில் நடிகர் விஜய் சேதுபதி கலந்துகொண்டார். பிரஜின் மற்றும் விஜய் சேதுபதி இருவரும் நெருக்கமான நண்பர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையை சேர்ந்தவர் ஜனனி. அவர் பிக் பாஸ் 6ம் சீசனில் போட்டியாளராக கலந்துகொண்டு பிரபலம் ஆனார். அவர் அதற்கு பிறகு விஜய்யின் லியோ படத்தில் சின்ன ரோல் ஒன்றில் தோன்றி இருந்தார். அதற்கு நல்ல வரவேற்பும் கிடைத்திருந்தது.

தற்போது ஜனனி ஹீரோயினாக ஒரு படத்தில் நடிக்க தொடங்கி இருக்கிறார்.

## சினிமா



மாலை வேளையில் பிரியா பவானி ஷங்கர் கடல் ஓரத்தில் அழகிய போஸ் கொடுத்த லேட்டஸ்ட் ஸ்டில்கள் இதோ.

## முதல் நாளில் மட்டுமே அபிஷன் நடித்துள்ள வித் லவ் படம் செய்த வசூல்... எவ்வளவு தெரியுமா?



சௌந்தர்யா ரஜினிகாந்த் தயாரிப்பில் அறிமுக இயக்குனர் மதன் இயக்கத்தில் அபிஷன் ஜீவிந்த், அனஸ்வரா ராஜன் ஜோடியாக நடித்துள்ள படம் வித் லவ்.

காதல் கதையை மையமாக கொண்டு எடுக்கப்பட்டு இருக்கும் இப்படத்தில் காவ்யா அனில், ஹரிஷ்குமார், சச்சின் நாச்சியப்பன், தேனி முருகன், ஆர்.ஜே.ஆனந்தி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

ஷான் ரோல்டன் தான் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். பள்ளிப் பருவக் காதல் என்ற வலி நிறைந்த நினைவுகளை உணர்ச்சிப் போராட்டங்களை உள்ளடக்கிய கதையாக இப்படம் அமைந்துள்ளது.

தனது மகள் தயாரித்துள்ள இப்படத்தை முதல் நாளே வந்து ரஜினிகாந்த் திரையரங்குகளில் பார்த்து நல்ல விமர்சனம் கொடுத்தார்.

மக்களின் பேராதரவையும் பெற்றுவரும் இப்படம் முதல் நாளில் ரூ. 2 கோடி வரை வசூல் வேட்டை செய்துள்ளதாக கூறப்படுகிறது.

# 27 நட்சத்திரங்களுக்கும் உரிய சித்தர்கள்

எல்லா சித்தர்களின் ஜீவ சமாதியும் சிவாலயமாகவே இருக்கும். குறைந்தது சித்த தியானத்திற்கு அரைமணி நேரமாவது ஒரு நிலையில் அமர வேண்டும். இந்த வழிமுறையை கடைபிடித்து உங்கள் கஷ்டத்தையும், வறுமையையும் போக்கிக்கொள்ளுங்கள். இப்போது 27 நட்சத்திரங்களுக்கும் உரிய சித்தர்கள் யார் யார் என்பதை பார்ப்போமா?




1. அசுவினி: அசுவினி நட்சத்திரக்காரர்கள் வணங்க வேண்டிய சித்தர் பெயர் காளங்கிநாதர். இவருடைய சமாதி மற்றும் சக்தி அலைகள் கஞ்சமலை மற்றும் திருக்கடையூர் ஆகிய தலங்களில் உள்ளது.

2. பரணி: சித்தர் போகர் ஆவார். இவருடைய சமாதி பழனி முருகன் சன்னதியில் உள்ளது.

3. கிருத்திகை:b இந்த நட்சத்திரத்திற்குரியவர் ரோமரிஷி சித்தர் ஆவார். இவருக்கு சமாதியும் இல்லை. இவர் உடல் அழியவும் இல்லை. நேரடியாக கைலாயத்திற்கு சென்றுவிட்டார் என்பதால், இவரை திங்கள்கிழமை வெள்ளை ஆடை அணிந்து வடக்கு நோக்கி நினைத்து வணங்க வேண்டும்.

4. ரோகிணி: சித்தர் மச்சமுனி ஆவார். இவருடைய ஜீவ சமாதி திருப்பரங்குன்றத்தில் உள்ளது.

5. மிருகசீரிஷம்: சித்தர் பாம்பாட்டி சித்தர். ஜீவ சமாதி சங்கரன்கோயில் என்ற ஊரில் உள்ளது. இன்னொருவர் சட்டமுனி சித்தராவார். ஊர் திருவரங்கம் ஆகும்.

6. திருவாதிரை: சித்தர் இடைக்காடர். ஜீவ சமாதி திருவண்ணாமலையில் உள்ளது.

7. புனர்பூசம்: சித்தர் தன்வந்திரி ஆவார். இவர் வைத்தீஸ்வரன் கோவிலில் ஜீவ சமாதி ஆனவர் என்பது குறிப்பிடத்தக்கது.

8. பூசம்: கமல முனி சித்தர் ஆவார். இவருடைய ஜீவ சமாதி திருவாரூர் என்ற ஊரில் உள்ளது.

9.

ஆயில்யம்: இந்த நட்சத்திரத்திற்கு உரிய சித்தர் அகத்தியர். இவருடைய ஒளி வட்டம் குற்றால பொதிகை மலையில் உள்ளது. சமாதி திருவனந்தபுரத்தில் உள்ளது.

10. மகம்: இந்த நட்சத்திரத்தில் அவதரித்தவர் சிவ வாக்கிய சித்தர் ஆவார். இவர் ஜீவ சமாதி கும்பகோணத்தில் உள்ளது.

11. பூரம்: இந்த நட்சத்திரத்தில் அவதரித்த தெய்வ பெண்மணிஸ்ரீ ஆண்டாள் ஆவார். இவர் பூமாதேவியின் அம்சமாக உள்ளார். அடுத்து ராமதேவ சித்தரும் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்தான். இவரை வழிபட வேண்டுமானால் அழகர்மலைக்கு செல்வது சிறப்பு.

12. உத்திரம்: இந்த நட்சத்திரத்திற்கு உரிய சித்தர் காகபுஜண்டர் ஆவார். இவர் ஜீவசமாதி திருச்சி மாவட்டம் உறையூரில் உள்ளது.

13. அஸ்தம்: சித்தர் கருவூரார் ஆவார். இவர் சமாதி கரூரில் உள்ளது. அடுத்து இவர் ஒளிவட்டம் வந்து செல்லும் இடம் தஞ்சாவூர் பெரிய கோயில் ஆகும்.

14. சித்திரை நட்சத்திரம்: சித்தர் புண்ணாக்கீசர் ஆவார். நண்ணா சேர் என்ற இடத்தில் இவர் ஜீவ சமாதி உள்ளது.

15. சுவாதி: சித்தர் புலிப்பாணி ஆவார். சமாதி பழனி அருகில் வைகாவூர் என்ற இடத்தில் உள்ளது.

16. விசாகம் நட்சத்திரம்: சித்தர் நந்தீசர் மற்றும் குதம்பை சித்தர் ஆவார். நந்தீசர் காசி நகரத்திலும், குதம்பை சித்தரின் ஜீவ சமாதி மாயவரத்திலும் உள்ளது.

17. அனுஷம்: சித்தர் வால்மீகி அல்லது வான்மீகர் என்று அழைக்கப்படுவார். இவரின் ஜீவ சமாதி எட்டுக்குடியில் உள்ளது.

18. கேட்டை: சித்தர் பகவான் வியாசர் ஆவார். இவர் உடல் அழிவற்றது. எனவே காற்றோடு காற்றாக கலந்து இருப்பார். இவரை நினைத்தாலே போதும். அவ்விடம் வருவார்.

19. மூலம் நட்சத்திரம்: சித்தர் பதஞ்சலி ஆவார். இவர் சமாதி ராமேஸ்வரத்தில் உள்ளது.

20. பூராடம்: சித்தர் பூரம் நட்சத்திரத்திற்கு சொல்லப்பட்ட ராமதேவர் எனும் யாகோப்பு சித்தரே ஆவார். அழகர்மலை மற்றும் மெக்காவில் ஜீவ ஒளி உள்ளது.

21. உத்திராடம்: இந்த நட்சத்திரத்திற்குரிய சித்தபிரான் கொங்கணர். இவர் ஜீவசமாதி திருப்பதியில் உள்ளது.

22. திருவோணம்: இந்த நட்சத்திரத்திற்கு உரிய சித்தர் தட்சிணாமூர்த்தி சுவாமிகள் ஆவார். இவருடைய சமாதி பாண்டிச்சேரி அடுத்து உள்ள பள்ளித்தென்னல் என்ற இடத்தில் உள்ளது.

23. அவிட்டம்: சித்தர் திருமூலர் ஆவார். இவருடைய ஜீவசமாதி சிதம்பரத்தில் உள்ளது.

24. சதயம்: இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர் கௌபாலர். இவரின் சமாதி எங்கு என தெரியவில்லை. எனினும் மன ஒழுக்கத்தோடு இவரை நினைத்தாலே தேடிவந்து அருள் புரிவார் எனக் குறிப்பு உள்ளது.

25. பூரட்டாதி: இதற்கான சித்தர் சோதி முனி ஆவார். இவர் ஜோதி வடிவிலே ஜீவனாக உள்ளவர். அதனால் இவருக்கு தீபம் ஏற்றி வழிபட்டால் அங்கு அருள்பாலிப்பார்.

26. உத்திரட்டாதி: இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர் டமரகர் சித்தர் ஆவார். இவரும் நேரிடையாக காற்றில் ஐக்கியமாகி கலந்து விட்டதாக வரலாறு கூறுகிறது. இவரை வீட்டிலேயே சிறுமணி ஓசையில் வரவழைத்து அவர் அங்கு வந்ததாக பாவித்து வணங்கலாம்.

27. ரேவதி: சித்தர் சுந்தரானந்தர் ஆவார். இவர் ஜீவசமாதி கோயில் மதுரையில் உள்ளது. தனி அறையில் ஒற்றை தீபம் மற்றும் ஏற்றி மன ஒரு நிலைப்பாட்டோடு சித்தரை வணங்கி வந்தால் போதும்.



ப.கோபிபச்சமுத்து
பாரதியார் நகர்,
கிருஷ்ணகிரி - 1

# தினம் ஒரு தலைவர்கள் அழகுமுத்துக்கோன் வரலாறு

1728ல் இல் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கட்டாலங்குளத்தில் பிறந்தவர். இவரது தந்தை அழகுமுத்துக்கோன் தாய் அழகு முத்தம்மாள்.

அந்த காலகட்டத்தில் தாத்தா, தந்தை பெயரே மகனுக்கு வைப்பது வழக்கம். அந்தவகையில் தான் இவருக்கும் வீர அழகுமுத்துக்கோன் என பெயரிடப்பட்டது.

1729ஆம் ஆண்டு இவரது தம்பி சின்ன அழகு முத்துக்கோன் பிறந்தார். இவர்கள் அழகுமுத்து சகோதரர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

1750 ல் தந்தை மன்னர் அழகுமுத்துக்கோன் அனுமந்தகுடி போரில் மரணம் அடைந்தார். தந்தையின் மரணத்தை தொடர்ந்து தனது 22 வயதில் அண்ணன் அழகுமுத்துக்கோன் கட்டாலங்குள சீமையின் மன்னரானார்.

வீர அழகுமுத்துக்கோனுக்கு எட்டயபுரம் மன்னரான ஜெகவீரராமபாண்டிய எட்டப்பர் மன்னர் சிறந்த நண்பராக இருந்தார்.

அழகுமுத்துக்கோன் ஆங்கிலேயர்கள் தன்னுடைய நாட்டில் வியாபாரம் செய்வதை விரும்பவில்லை, அதனால் ஆங்கிலேயர்கள் மீது அவருக்கு வெறுப்பு அதிகமாக இருந்தது.

எந்த உரிமையில் வரி கேட்கிறீர்கள்? இப்படியொரு நிலையில் 1750ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் தளபதி அலெக்சாண்டர் கிரேன் மற்றும் மருதநாயகம் (கான்சாகிப்) ஆகியோர் எட்டயபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு வரி வசூலிக்க வந்தனர்.

ஆங்கிலேயர்களை எதிர்க்க வீர அழகுமுத்துக்கோன் ஆலோசனைக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். இந்த கூட்டத்தில் அழகுமுத்து சகோதரர்கள், ஜெகவீரராம எட்டப்பர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதில், ஆங்கிலேயர்களுக்கு வரி செலுத்துவதில்லை என முடிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து வரி கட்ட முடியாது என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது.

“வணிகம் செய்ய வந்த நீங்கள் எங்கள் மக்களிடம் வரி வசூலிக்க என்ன உரிமை இருக்கிறது? வரி வசூல் செய்ய வந்தால் கும்பினிகளின்( ஆங்கிலேய வியாபாரக் கூட்டம்) தலை இந்த மண்ணில் உருளும்” என்று அந்த கடிதத்தில் எழுதியிருந்தது.

இதனால் ஆத்திரம் கொண்ட பிரிட்டிஷார்கள் எட்டயபுரபாளையத்தில் தனது படைகளை குவித்தனர். அப்போது, எட்டயபுர மன்னரையும் மக்களையும் பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்த வீரன் அழகுமுத்துக்கோன் படையை திரட்டத் தொடங்கினார்.

எட்டயபுரம் பாளையத்துக்கு ஆதரவாகப் போராடிய அழகுமுத்து சகோதரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே போர் மூண்டது. இந்த போரில் அழகுமுத்துக்கோன் வென்றார். இதுதான் பிரிட்டிஷாருக்கு எதிராக நடந்த முதல் போர் என வரலாறு கூறுகிறது.

இதைத்தொடர்ந்து பல இடங்களில் ஆங்கிலேயர்களுக்கு எதிர்ப்பு கிளம்பிய நிலையில், 1755 பிப்ரவரி மாத தொடக்கத்தில் திருநெல்வேலி சீமை நோக்கி ஒரு பெரிய படை அணிவகுத்தது.



இந்தப் படையெடுப்பின் முக்கிய நோக்கம் தென்நாட்டு அரசர்களிடம் இருந்து கப்பம் வசூலிப்பதும், கும்பினிகளின் அதிகாரத்தை தென் நாட்டில் நிலைநிறுத்துவதுமாகும்.

மார்ச் 9, 1755இல், மருதநாயகம் தலைமையிலான படைகள் காளமேகப் பெருமாள் கோயிலுக்கு தீ வைத்து, அங்கிருந்த அனைத்து ஆபரணங்களையும் கொள்ளையடித்தன.

அந்த சமயத்தில் மதுரையில் இருந்து ஆங்கிலேயப் படை திருநெல்வேலிக்கு வருவதை அறிந்து அவர்களை எதிர்க்க மன்னர் பூலித்தேவன் எட்டயபுர மன்னரிடம் உதவி கேட்டார். ஆனால் அவர் உதவி செய்யவில்லை. அழகுமுத்துக்கோன் சகோதரர்கள் பூலித்தேவனுக்கு உதவி செய்ய முன் வந்தனர்.

பூலித்தேவனின் படையும் திருவிதாங்கூர் ராணுவமும் அழகுமுத்துக்கோனின் படையுடன் இணைந்து ஆங்கிலேய படைகளை எதிர்த்து போரிட்டது. இதுவே குறுநில மன்னர்களின் கூட்டமைப்புக்கான முதல் படி.

1755ல் எட்டயபுரத்தைத் தாக்க வந்த ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக வீர அழகுமுத்துக்கோனின் படையை சின்ன அழகுமுத்துக்கோன் வழிநடத்தினார்.

அங்கிருந்த பெருமாள் கோயிலை தாக்க வந்த போது, அதை காக்க

அழகுமுத்துக்கோனின் படைகள் கடுமையாகப் போராடிக் கொண்டிருந்த நேரத்தில், சின்ன அழகுமுத்துக்கோன் ஆங்கிலேயர்களால் சுடப்பட்டு 1755 ஏப்ரல் 07ஆம் தேதி பெருமாள் கோயில் முன் மரணமடைந்தார்.

தனது தம்பியின் மரணத்தை தாங்கிக் கொள்ள முடியாத மன்னர் வீர அழகுமுத்துக்கோனும், அவரது வீரர்களும் கடும் போரில் ஈடுபட்டனர். போர் முடிவடையும் தருவாயில் பிரிட்டிஷ் படைகள் பின்வாங்கின.

அப்போது அழகுமுத்துக்கோனின் வீரத்தை நன்கறிந்த மருதநாயகம் எட்டயபுரம் அரண்மனையை தாக்கப்போவதாக அறிவித்தார். அந்த பதட்டமான சூழலில் எட்டயபுரம் மன்னரையும், மக்களையும் காத்து பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்த வீர அழகுமுத்துக்கோன், வெளியே சென்று ஆள்திரட்டி 700க்கும் அதிகமானவர்களை தனது படையில் சேர்த்தார்.

இவர்கள் பெத்தநாயக்கனூர் கோட்டையில் தங்கியிருந்த நிலையில் கான்சாகிப் படைகள் தாக்குதலில் ஈடுபட்டன. வீர அழகுமுத்துக்கோனும் அவரது தளபதிகளும் கடுமையாகப் போரிட்டனர். அப்போது அழகுமுத்துக்கோனின் குதிரை சுட்டுதள்ளப்பட்டது.

முத்துகோனின் வலது காலிலும் சுடப்பட்டது. இருந்தபோதிலும் ரத்தம் சொட்ட, சொட்ட தொடர்ந்து மூன்று மணி நேரம் போர் புரிந்தார் அழகுமுத்துக்கோன். பல வீரர்கள் இறந்தனர்.

அழகுமுத்துக்கோனையும், அவரது 6 தளபதிகளையும், 248 வீரர்களையும் ஆங்கிலேயப்படை சிறை பிடித்தது. நடுக்காட்டுச்சீமை பகுதிக்கு அழைத்துச் சென்று பீரங்கி முன்பு நிறுத்தி வரி செலுத்துமாறு வற்புறுத்தினர்.

தாய் நாட்டுக்காக மரணத்துக்கு முத்தம் மன்னிப்பு கேட்டால் உயிர் மிஞ்சும் என எச்சரித்தனர். ஆனால் எதற்கும் அஞ்சாத அழகுமுத்துக்கோன், வரி கட்ட ஒப்புக்கொள்ள முடியாது என்று மறுத்துவிட்டார். பின்னர் அனைத்து வீரர்களின் வலது கரங்களும் வெட்டப்பட்டன.

வீரன் அழகுமுத்துக்கோனும் 6 தளபதிகளும் பீரங்கியால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில், 7 பேரும் உடல்கள் சிதறி உயிரிழந்தனர். அவர்களின் உடல்கள் சேகரிக்கப்பட்டு, எட்டயபுரம் அருகில் உள்ள சோழாபுரம் கண்மாயில் எரியூட்டப்பட்டது.

”கட்ட மிகுந்திடம் கட்டாலங்குளம் அழகு முத்துக்சேருவைகாரன் அவன் கோட்டை பெத்த ஊரிலும் தானுமே கொற்றவன் காக்கவே சண்டை செய்தான் வீராதி வீரரும் சூராதி சூரரும் வெங்கல கைகளை தானிழந்தார்… மன்னாதி மன்னரை மார் காத்து நின்ற முத்து மாணிக்க சேர்வையும் மாய்ந்து விட்டார் பரிமேல் ஏறிரண கள மேவிய பச்சைமால் சேர்வையும் மாண்டுவிட்டான்” என்ற “சேவைக்காரர் சண்டை கும்மி” பாடல் அழகுமுத்துக்கோனின் போரையும் அவர் போரில் கொல்லப்பட்டதையும் கூறுகிறது.

தனது நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் இவர் மரணத்தை முத்தமிட்ட ஆண்டு 1759

ஆங்கிலேயருக்கு எதிராக போரிட்ட வீரமுத்துக்கோனுக்கு தமிழக அரசு, கட்டாலங்குளத்தில் மணி மண்டபம் கட்டியது. இங்கு ஆண்டுதோறும் ஜூலை 11ஆம் நாள் அரசு சார்பில் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது. 2015 ஆம் ஆண்டு இந்திய அரசின் சார்பில் தபால் தலை ஒன்று வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்ற அமளியால் இதுவரை ரூ.57 கோடி இழப்பு

புதுடெல்லி, பிப்.8:

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் கடந்த 2-ம் தேதி தொடங்கியது. அப்போது சீனா-எல்லைப் பிரச்சினை தொடர்பாக முன்னாள் ராணுவ தளபதி நரவனே எழுதி வெளிவராத புத்தகத்தில் உள்ள தகவல்களை மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி மேற்கோள் காட்டினார்.

இதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். இந்த விவகாரத்தில் 8 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர். இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கடந்த சில நாட்களாக அமளி தொடர்கிறது. இதனால் மக்களவை ஒத்திவைக்கப்பட்டு வருகிறது.

நாடாளுமன்றம் செயல்பட ஒரு நிமிடத்துக்கு ரூ2.5 லட்சமும், ஒரு மணி நேரத்துக்கு ரூ.1.5 கோடியும், நாள் ஒன்றுக்கு ரூ.9 கோடியும் செலவாகிறது என மதிப்பிடப்பட்டுள்ளது.

பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கியதிலிருந்து இது வரை மக்களவை 30 முதல் 35 மணி நேரம் செயல்பட்டிருக்க வேண்டும். இதில் 20 முதல் 25 மணி நேரம் அமளி காரணமாக வீணாகியுள்ளது. இதனால் மக்களவை இழப்பு மட்டும் ரூ.30 முதல் ரூ.35 கோடி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல் மாநிலங்களவையில் அமளி காரணமாக 12 முதல் 15 மணி நேரம் வீணாகியுள்ளது. இங்கு ஏற்பட்ட இழப்பு ரூ.18 முதல் ரூ.22 கோடி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்தத்தில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஏற்பட்ட அமளி காரணமாக பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கியதில் இருந்து இதுவரை ரூ.57 கோடி இழப்பு ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

# சபரிமலை தங்கம் திருட்டு வழக்கில் நடிகர் ஜெயராமுக்கு அமலாக்கத் துறை சம்மன்

திருவனந்தபுரம், பிப்.8:

சபரிமலை ஐயப்பன் கோயில் கருவறையின் கதவுகள் மற்றும் பீடத்துடன் கூடிய 2 துவார பாலகர் சிலைகளுக்கு கடந்த 1999-ம் ஆண்டு தங்கத் தகடுகள் பொருத்தப்பட்டன. கடந்த 2019-ம் ஆண்டில் துவார பாலகர் சிலைகள், கருவறை கதவுகளை தனது சொந்த செலவில் புதுப்பிக்க முன்னாள் அர்ச்சகர் உன்னிகிருஷ்ணன் போத்தி முன்வந்தார். இதன்படி சென்னையில் உள்ள நிறுவனத்தில் துவார பாலகர் சிலைகள், கருவறை கதவுகளுக்கு மீண்டும் தங்க முலாம் பூசப்பட்டது.

கடந்த 2020-ம் ஆண்டில் சிலைகள், கதவுகள் தேவசம் போர்டிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்த சூழலில் கடந்த ஆண்டு செப்டம்பரில் துவாரபாலகர் சிலைகள், கதவுகளில் 4.5 கிலோ தங்கம் மாயமாகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதுதொடர்பாக கேரள உயர் நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் அந்த மாநில காவல் துறையின் சிறப்பு புலனாய்வு குழு விசாரணை நடத்தி வருகிறது. இதே விவகாரம் தொடர்பாக அமலாக்கத் துறை தனியாக வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறது.



சபரிமலை ஐயப்பன் கோயில் கருவறை கதவுகள், துவார பாலகர் சிலைகளுக்கு சென்னையில் தங்க மூலாம் பூசியபோது சென்னை அசோக் நகரில் உள்ள நடிகர் ஜெயராம் வீட்டுக்கு அவை எடுத்துச் செல்லப்பட்டு சிறப்பு பூஜை, வழிபாடுகள் நடத்தப்பட்டன. இதுதொடர்பாக நடிகர் ஜெயராமிடம் கேரள சிறப்பு புலனாய்வு குழு அண்மையில் விசாரணை நடத்தியது.

இதைத் தொடர்ந்து அமலாக்கத்துறை சார்பில் நடிகர் ஜெயராமுக்கு சம்மன் அனுப்பப்பட்டு உள்ளது. அடுத்த சில நாட்களில் அவர் அமலாக்கத் துறை அதிகாரிகள் முன்பு நேரில் ஆஜராகி விளக்கம் அளிப்பார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. சபரிமலை தங்கம் திருட்டு வழக்கில் கைது செய்யப்பட்ட முன்னாள் அர்ச்சகர் உன்னிகிருஷ்ணன் போத்தி அண்மையில் ஜாமீனில் விடுதலையானார். அமலாக்கத் துறை சார்பில் அவருக்கும் சம்மன் அனுப்பப்பட்டு உள்ளது. அடுத்த சில நாட்களில் அவர் கொச்சியில் உள்ள அமலாக்கத் துறை அலுவலகத்தில் ஆஜராவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# "இந்தியாவின் கிரிக்கெட் திறமை ஜொலிக்கிறது..": பிரதமர் மோடி வாழ்த்து

புதுடெல்லி, பிப்.8:

ஜிம்பாப்வேயில் நடைபெற்ற இளையோர் உலகக்கோப்பை தொடரின் இறுதிப்போட்டியில் இங்கிலாந்து அணியை வீழ்த்து இந்திய 6-வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றது. பட்டம் வென்ற இந்திய அணிக்கு பல்வேறு தரப்பில் இருந்தும் வாழ்த்துகள் குவிந்து வருகிறது.

இந்தநிலையில், வெற்றிக்கோப்பையை உச்சிமுகர்ந்த இந்திய அணிக்கு பிரதமர் மோடியும் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"இந்தியாவின் கிரிக்கெட் திறமை ஜொலிக்கிறது! உலகக் கோப்பையை வென்று தாயகம் கொண்டு வந்த நமது 19 வயதுக்குட்பட்டோர் அணி குறித்து நாங்கள் பெருமை கொள்கிறோம். இந்தத் தொடர் முழுவதும் நமது அணி மிகச் சிறப்பாக விளையாடி, அசாதாரண திறமையை வெளிப்படுத்தியுள்ளது. இந்த வெற்றி பல இளம் விளையாட்டு வீரர்களுக்கும் உத்வேகம் அளிக்கும். வீரர்களின் வருங்கால முயற்சிகளுக்கு வாழ்த்துகள்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உபெர், ஓலா, ரேபிடோ ஓட்டுநர்கள் வேலைநிறுத்தம்

புதுடெல்லி, பிப்.8:

உபெர், ஓலா, ரேபிடோ ஓட்டுநர்கள் நாடு தழுவிய வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

அதன்படி ஆயிரக்கணக்கான ஓட்டுநர்கள் குறைந்தது ஆறு மணி நேரத்திற்கு செயலியிலிருந்து வெளியேறி தங்களது பணிகளை நிறுத்தத் திட்டமிட்டுள்ளனர். ஊதியம் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடக்கிறது. இதனால் வாடகை கார்கள், ஆட்டோ மற்றும் பைக் டாக்சிகளின் சேவை விடுமுறை நாளான கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தெலங்கானா கிக் மற்றும் பிளாட்ஃபார்ம் தொழிலாளர் சங்கம் இந்த வேலைநிறுத்தத்தை அறிவித்துள்ளது. இதற்கு தேசிய அளவிலான பல்வேறு தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

# கர்நாடகாவில் ரோஹித் வெமுலா சட்டம்

பெங்களூரு, பிப்.8:

ஹைதராபாத் பல்கலைக்கழகத்தில் பி.எச்டி படித்த பட்டியலின மாணவர் ரோஹித் வெமுலா சாதி பாகுபாட்டின் காரணமாக கடந்த 2016-ம் ஆண்டு தற்கொலை செய்து கொண்டார். இதையடுத்து, கர்நாடகாவில் உயர் கல்வி நிறுவனங்களில் சாதிய பாகுபாடுகளை தடுக்க ரோஹித் வெமுலா பெயரில் தனிச்சட்டம் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. இந்த சட்டம் வரும் பட்ஜெட் கூட்டத்தொடரில் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட இருப்பதாக அமைச்சர் சுதாகர் தெரிவித்தார்.

# திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் புதிய நிர்வாக அதிகாரியாக எம்.ரவிச்சந்திரா பதவியேற்பு

திருமலை, பிப்.8:

திருமலை திருப்பதி தேவஸ்தானநிர்வாக அதிகாரியாக அனில் குமார் சிங்கால் பதவி வகித்து வந்தார். இவர் முந்தைய ஜெகன் ஆட்சியில் திருப்பதி தேவஸ்தானத்தில் நடந்த கலப்பட நெய் விவகாரத்தில் அப்போதைய அறங்காவலர் குழு தீர்மானங்களை தடுக்காமல் அலட்சியப்போக்கை கடைபிடித்தார் என சிறப்பு புலனாய்வு குழு கருத்து தெரிவித்தது. இதன் அடிப்படையில் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இதையடுத்து அமராவதியில் சிஎம்ஓ அலுவலகத்தில் முதல்வர் சந்திரபாபு நாயுடுவுக்கு முக்கிய செயலாளராக பணியில் இருந்த எம்.ரவிச்சந்திரா, திருப்பதி தேவஸ்தான புதிய நிர்வாக அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டார். இந்நிலையில் ஏழுமலையான் கோயிலில் உள்ள ரங்கநாயக மண்டபத்தில் அவர் நேற்று பதவியேற்றார். முன்னதாக அவர் தனது மனைவியுடன் ஏழுமலையானை தரிசனம் செய்தார். அவருக்கு தேவஸ்தான கூடுதல் நிர்வாக அதிகாரி வெங்கய்ய சவுத்ரி தீர்த்த பிரசாதங்கள் வழங்கி கவுரவித்தார். புதிய நிர்வாக அதிகாரி ரவிச்சந்திரா பேசுகையில், "தேவஸ்தான அறங்காவலர் குழு, முத்த அதிகாரிகள் மற்றும் பக்தர்களின் கருத்துகளை கேட்டறிந்து, பக்தர்களின் மனம் புண்படாத வகையில் செயல்படுவேன். ஏழுமலை யானுக்கு சேவை செய்யும் இந்த பாக்கியத்தை வழங்கிய ஆந்திர முதல்வருக்கு மனதார நன்றி தெரிவிக்கிறேன்" என்றார்.

இவர் ஏற்கனவே ஒருங்கிணைந்த சித்தூர் மாவட்ட ஆட்சியராக பணியாற்றியுள்ளார். திருப்பதி தேவஸ்தானம் குறித்தும் அதன் நிர்வாகம் குறித்தும் நன்றாக அறிந்தவர் ஆவார்.

# விமானங்களின் தரப் பரிசோதனை: 754-ல் கோளாறானவை 377 – மத்திய அரசு தகவல்

புதுடெல்லி, பிப்.8:

கடந்த ஆண்டு ஜனவரி முதல் இந்தாண்டு பிப்.3-ம் தேதி வரை பரிசோதிக்கப்பட்ட 754 விமானங்களில், 377 விமானங்களில் கோளாறுகள் இருந்தன என்ற அதிர்ச்சி தகவலை மக்களவையில் மத்திய விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் முரளிதர் மோஹோல் தெரிவித்தார்.

விமானங்கள் பரிசோதனை தொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய இணையமைச்சர் முரளிதர் மோஹோல் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் கூறியதாவது: கடந்த மூன்று ஆண்டுகளில் விமானங்களில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. கடந்த ஆண்டு இது போன்ற 353 சம்பவங்கள் நிகழ்ந்தன. 2024-ம் ஆண்டு மொத்தம் 421 தொழில்நுட்பக் கோளாறுகள் பதிவாகியுள்ளன, இது முந்தைய ஆண்டின் 448-ஐ விடக் குறைவு.

அனைத்து விமானங்கள் மற்றும் விமான நிலைய இயக்குநர்களுக்கான விதிமுறைகள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத் தேவைகளுக்கு இணங்குவதைக் கண்காணிக்க, விமானப் பாதுகாப்பு ஒழுங்குமுறை அமைப்பான சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) ஒரு முறையான பாதுகாப்பு மேற்பார்வை முறையைக் கொண்டுள்ளது. இதில் கண்காணிப்பு, திடீர் சோதனைகள் மற்றும் ஒழுங்குமுறை தணிக்கைகள் ஆகியவை அடங்கும். ஏதேனும் மீறல்கள் அல்லது விதிமுறைகளுக்கு மாறானது எனக் கண்டறியப்பட்டால், டிஜிசிஏவால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது தொடர்பாக டிஜிசிஏ ஒரு சுற்றறிக்கையையும் வெளியிட்டுள்ளது. விமானங்களின் அனைத்துவகைக் குறைபாடுகளையும் டிஜிசிஏவிற்குத் தெரிவிக்குமாறு விமான நிறுவனங்களுக்கு அது அறிவுறுத்தியுள்ளது எனத் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் உள்ள தனியார் விமான நிறுவனங்கள், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தம் முழு விமானங்களையும் அவ்வப்போது ஆய்வு செய்கின்றன. இதில், பல்வேறு வகையான உபகரணங்களும் ஆய்வு செய்யப்படுகின்றன.

இந்த உபகரணங்களின் முன்னுரிமை அல்லது அவசரநிலையின் அடிப்படையில் இவை ஏ, பி, சி மற்றும் டி என நான்கு வகை நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு ஆய்வு செய்த அதே காலகட்டத்தில் டிஜிசிஏவும் அனைத்து நிறுவனங்களின் விமானங்கள் மீது 3,890 கண்காணிப்பு ஆய்வுகளை நடத்தியுள்ளது.

# ஆகமம் அல்லாத கோயில்களை கண்டறிய உச்ச நீதிமன்றம் அவகாசம்

புதுடெல்லி, பிப்.8:


ஆகமக் கோயில்களில் அர்ச்சகர்கள் நியமனத்தின் போது, ஆகம விதிகளை பின்பற்றக் கோரிய மனுக்களை உச்ச நீதிமன்ற நீதிபதி சுந்தரேஷ் தலைமையிலான அமர்வு விசாரித்து வருகிறது. ஆகமக் கோயில்களை கண்டறிய மயிலம் பொம்மபுர ஆதீனத்தை நியமிக்க உச்ச நீதிமன்றம் பரிந்துரை செய்தது. இந்நிலையில், ஆகம விதிகள் பின்பற்றப்படாத கோயில்களைக் கண்டறிய தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று மேலும் 4 மாதம் உச்ச நீதிமன்றம் அவகாசம் வழங்கியது.

# கடந்த 10 ஆண்டுகளில் விசாரணை நீதிமன்றங்களில் 1,310 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது

புதுடெல்லி, பிப்.8:

'இந்தியாவில் மரண தண்டனை: ஆண்டு புள்ளிவிவர அறிக்கை - 2025' கடந்த 4-ம் தேதி வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையை ஹைதராபாத்தில் உள்ள தேசிய சட்ட ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சி அகாடமியின் சட்டப் பல்கலைக்கழகத்தின், 'திஸ்கொயர் சர்க்கிள் கிளினிக்' குற்றவியல் நீதி பிரிவு ஆய்வு செய்து வெளியிட்ட தகவலில் கூறியிருப்பதாவது:

கடந்த 2016-ம் ஆண்டு முதல் 2025-ம் ஆண்டு வரையில் விசாரணை நீதிமன்றங்கள் 1,310 பேருக்கு மரண தண்டனை விதித்துள்ளன. அவற்றில் 106 பேருக்கு மட்டும் மரண தண்டனையை உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. இதன் மூலம் விசாரணை நீதிமன்றங்கள் அளிக்கும் தண்டனைகளுக்கும் உயர் நீதிமன்றங்களில் வெளிவரும் தீர்ப்புகளுக்கும் நிலையான இடைவெளி இருப்பதை காண முடிகிறது.



கடந்த ஆண்டு டிசம்பர் 31-ம் தேதி நிலவரப்படி சிறை கைதிகள் 574 பேர் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களாக இருந்தனர்.

இது கடந்த 2016-ம் ஆண்டு முதல் அதிகபட்சமாகும். அதன்படி கடந்த 2025-ம் ஆண்டு மட்டும் 94 வழக்குகளில் 128 மரண தண்டனைகளை செஷன்ஸ் நீதிமன்றம் வழங்கியுள்ளது. அவற்றில் பெரும்பாலான மரண தண்டனைகளை உயர் நீதிமன்றங்கள் குறைத்துள்ளன, அல்லது விடுவித்துள்ளன. இதே நிலை தான் உச்ச நீதிமன்றத்திலும் காணப்படுகிறது.

உயர் நீதிமன்றங்களில் மரண தண்டனை உறுதி செய்யப்பட்டிருந்தாலும், கடந்த 2023-ம் ஆண்டில் இருந்து 2025-ம் ஆண்டு வரையில் உச்ச நீதிமன்றம் ஒருவருக்குக் கூட மரண தண்டனையை உறுதிப்படுத்தவில்லை.

விசாரணை நீதிமன்றங்களில் அதிகபட்சமாக மரண தண்டனை விதிக்கப்பட்டு, உயர் நீதிமன்றங்கள், உச்ச நீதிமன்றத்தில் மாற்றி தீர்ப்பளிக்கும் போது, மரண தண்டனை வழங்குவதன் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுகிறது. அதேநேரத்தில் மரண தண்டனையில் இருந்து விடுவிக்கப் படுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது குற்றவியல் நீதிமுறையின் குறைகளை எடுத்துக் காட்டுகிறது. இது விசாரணையின் தோல்வியை எடுத்துக்காட்டுகிறது. இந்த தவறுகளால் பாதிக்கப்பட்டவர்களும், குற்றவாளிகளும் கூட பாதிக்கப்படுகின்றனர். அவர்களின், வாழ்வாதாரம் பாதிக்கிறது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# குஜராத் - அகமதாபாத்தில் நடந்த கேளிக்கை விருந்தில் வெளிநாட்டு மது வகை, ஹுக்கா விநியோகம்

அகமதாபாத், பிப்.8:

குஜராத் மாநிலத்தில் பூரண மதுவிலக்கு சட்டம் அமலில் உள்ளது. அங்கு வெளிநாட்டினர் மற்றும் அனுமதி பெற்றவர்கள் மது அருந்த முடியும் என்ற நிலை உள்ளது. இந்நிலையில் அகமதாபாத்தில் உள்ள நிர்வாணா கிரீன்ஸ் வீக்கெண்ட் ஹோம்ஸ் என்ற தனியார் விடுதியில் நேற்று முன்தினம் அனுமதியின்றி மது விருந்து நடைபெறுவதாக போலீஸாருக்குத் தகவல் வந்தது. இதையடுத்து போலீஸார் அங்கு சென்று சோதனை நடத்தினர்.

அப்போது அங்கு அனுமதியின்றி வெளிநாட்டு மது வகைகள், ஹுக்கா ஆகியவை விருந்தினர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது தெரியவந்தது. இதையடுத்து அந்த விருந்தில் கலந்துகொண்ட 81 பேரை போலீஸார் பிடித்து விசாரித்தனர்.

இதில் 43 பேர் ஆண்கள், 38 பேர் பெண்கள். இதில் பலர் கட்டிட நிறுவன அதிபர்கள், மருத்துவர்கள், தொழிலதிபர்கள் என விசாரணையில் தெரியவந்தது. அகமதாபாத்தைச் சேர்ந்த ஒரு தொழிலதிபரின் 25ம் ஆண்டு திருமணக் கொண்டாட்டத்துக்காக இந்த விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அங்கிருந்த வெளிநாட்டு மதுவகைகள், ஹுக்கா பைப்புகள், 20-க்கும் மேற்பட்ட விலை உயர்ந்த சொகுசு கார்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இது தொடர்பாக அகமதாபாத் சனந்த் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 5 மாநில தேர்தல் பார்வையாளர்களுக்கு பயிற்சி; டெல்லியில் 2 நாட்கள் நடந்தது

புதுடெல்லி, பிப்.8:

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா உள்பட 5 மாநில சட்டசபைகளுக்கு விரைவில் தேர்தல் நடைபெறுகிறது. இதற்காக தேர்தல் கமிஷன் நியமித்த மத்திய பார்வையாளர்களுக்கு 2 நாள் பயிற்சி டெல்லியில் நடைபெற்றது. இதில் 714 பொது பார்வையாளர்கள், 233 காவல் பார்வையாளர்கள் மற்றும் 497 செலவின பார்வையாளர்கள் என 1444 அதிகாரிகள் கலந்து கொண்டனர். அப்போது வாக்காளர் பட்டியல் தயாரித்தல், தேர்தல் நடத்துதல், செலவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஊடகங்கள் தொடர்பான விஷயங்கள் குறித்து விளக்கப்பட்டது. மின்னணு வாக்குப் பதிவு எந்திரங்களின் செயல் விளக்கமும் அளிக்கப்பட்டது. பயிற்சி நிறைவு நாளான தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார், தேர்தல் கமிஷனர்கள் சுக்பீர்சிங் சந்து. விவேக் ஜோஷி ஆகியோர் பங்கேற்று பயிற்சி மற்றும் விளக்கம் அளித்தனர். அத்துடன் சந்தேகங்களை நிவர்த்தி செய்தனர். தேர்தல் பார்வையாளர்கள் சுதந்திரமான, நியாயமான மற்றும் வெளிப்படையான தேர்தல்களை உறுதி செய்ய வேண்டும் என ஞானேஷ் குமார் அறிவுறுத்தினார்.

# மேகாலயா சுரங்க விபத்து: பலி எண்ணிக்கை 25 ஆக உயர்வு

புதுடெல்லி, பிப்.8:

மேகாலயாவின் கிழக்கு ஜைந்தியா ஹில்ஸ் மாவட்டத்தில் உள்ள சட்டவிரோத நிலக்கரி சுரங்கத்தில் நிகழ்ந்த வெடிவிபத்தில் பலியானோரின் எண்ணிக்கை (பிப்ரவரி 6) 25 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று 18 உடல்கள் மீட்கப்பட்ட நிலையில், மேலும் 7 உடல்கள் மீட்கப்பட்டிருப்பதாக மேகாலயா டிஜிபி நோங்ராங் உறுதிப்படுத்தியுள்ளார்.

உம்சங்காட் கிராமத்தில் உள்ள தாங்ஸ்கு பகுதியில் இயங்கி வந்த இந்த சட்டவிரோத சுரங்கத்தில், நேற்று காலை சுமார் 11 மணியளவில் சக்திவாய்ந்த வெடி விபத்து நிகழ்ந்தது. டைனமைட் வெடிமருந்துகளைப் பயன்படுத்தி நிலக்கரி எடுக்கும்போது இந்த விபத்து நேரிட்டதாகக் கருதப்படுகிறது. சுரங்கத்திற்குள் இன்னும் பலர் சிக்கியிருக்கலாம் என்ற அச்சத்தில் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படைகள் தொடர்ந்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. தற்போது வரை 12 உடல்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்தத் துயரச் சம்பவத்திற்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குப் பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 2 லட்சம் மற்றும் மாநில அரசின் சார்பில் தலா ரூ. 3 லட்சம் இழப்பீடு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேகாலயா முதலமைச்சர் கான்ராட் சங்மா, சட்டவிரோத சுரங்க உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளார். இது தொடர்பாக நிலக்கரி சுரங்க உரிமையாளர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். 2014-ம் ஆண்டு முதல் மேகாலயாவில் எலி வளை சுரங்க முறைகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தும், இத்தகைய சட்டவிரோதச் செயல்பாடுகள் தொடர்வது குறிப்பிடத்தக்கது.

# ரயில் திட்டங்கள் நிறுத்தம்: ஆப்பிள் விவசாயிகள் மகிழ்ச்சி

ஸ்ரீநகர், பிப்.8:

ஸ்ரீநகருக்கு தெற்கே 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சோபியான் மாவட்ட நீல் திரிசில் செக் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஷபீர் அகமது கூறுகையில், "எங்களின் குடும்ப வாழ்வாதாரத்தை மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவின் ஒற்றை அறிவிப்பு காப்பாற்றியுள்ளது.

45 சிறு விவசாய குடும்பங்களை கொண்ட இந்த கிராமத்தில் ஏற்கெனவே ரயில்வே பாதை அமைப்பதற்கான நில அளவீடு பணிகள் முடிக்கப்பட்டு விட்டன காக்கபோரா–ஷோபியான் இடையிலான ரயில் பாதைக்காக 20 குடும்பங்களின் நிலங்களை கையகப்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக, எங்கள் ஆப்பிள் தோட்டங்களில் சிறிய தூண்கள் நடப்பட்டிருந்தன. சுமார் 7 லட்சம் ஆப்பிள் மரங்களை வெட்ட வேண்டிய சூழல் இருந்தது. இந்த நிலையில் ரயில் திட்டம் நிறுத்தம் என, மத்திய அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பு ஈகைத் திருநாள் போன்ற மகிழ்ச்சியை எங்களுக்கு தந்துள்ளது" என்றார். இந்தியாவின் மொத்த ஆப்பிள் உற்பத்தியில் காஷ்மீர் 75 சதவீதப் பங்களிப்பை வழங்குகிறது. இது, ஜிடிபியில் 8 சதவீதம் ஆகும். சுமார் 35 லட்சம் மக்கள் இத்தொழிலை நம்பியுள்ளனர்.

# 3 ஆயிரம் கி.மீ. தொலைவிலான இலக்கை தாக்கும் திறன் கொண்ட அக்னி-3 ஏவுகணை பரிசோதனை வெற்றி

பாலசோர், பிப்.8:

ஒடிசாவின் பாலசோர் மாவட்டத்தில் சந்திப்பூர் கடலோர பகுதியில் அணு ஆயுதங்களை சுமந்து சென்று தாக்க கூடிய திறன் படைத்த அக்னி-3 ஏவுகணை ஏவி பரிசோதனை செய்யப்பட்டது. அது வெற்றியும் அடைந்துள்ளது. 17 மீட்டர் நீளம் கொண்ட இந்த ஏவுகணை 3 ஆயிரம் கி.மீ. தொலைவிலான இலக்கை தாக்கும் திறன் கொண்டது. இதில் ஏவுகணையின் அனைத்து செயல்பாட்டு நடவடிக்கைகளும் மற்றும் தொழில்நுட்பங்களும் சரியாக பரிசோதிக்கப்பட்டன. இதில், வங்காள விரிகுடாவில் இலக்கை துல்லியத்துடன் தாக்கியது. அப்போது, ஏவுகணையின் பயணத்திற்கான பாதை ரேடார் உதவியுடன் சரியாக கண்காணிக்கப்பட்டது. ஏவுகணை பரிசோதனையின்போது, அனைத்து விசயங்களையும் அது நிறைவேற்றியது என டி.ஆர்.டி.ஓ. தெரிவித்துள்ளது.




## போதைப் பொருள் வழக்கில் நடிகை, கிரிக்கெட் வீரர் கைது



**சென்னை, பிப்.08:** போதைப் பொருள் வழக்கில் நடிகை, கிரிக்கெட் வீரர் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர். சென்னை வளசரவாக்கத்தில் கடந்த 4-ம் தேதி போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவு போலீஸார் மற்றும் வளசரவாக்கம் போலீஸார் ஒருங்கிணைந்து கண்காணித்தனர்.

அப்போது அங்கு காரில் வந்த மாங்காடு, கோவூரைச் சேர்ந்த வெங்கடேஷ்குமார் (31), அதேபகுதி கார்த்திக் ராஜா (31), காட்டுப்பாக்கம் யஷ்வந்த் (25), நெசப்பாக்கம் விக்னேஷ்வரன் (35) ஆகிய 4 பேரை பிடித்து அவர்களிடமிருந்து மெத்தம்பெட்டமைனை பறிமுதல் செய்தனர்.

அவர்கள் கொடுத்த தகவலின்பேரில் போதைப்பொருள் வைத்திருந்த மேற்கு மாம்பலம் ஸ்ரீராம் (33), கேரளா பாலக்காடு அல்விபின்ஷா (27), வடபழனி வின்சி நிவேதா (26), மண்ணடிதமீம் நிஸ்வான் (27), அதே பகுதிஅஞ்சு கிருஷ்ணா (30) ஆகிய மேலும் 5 பேர் என மொத்தம் 9 பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

முன்னதாக அவர்களிடமிருந்து 6 கிராம் மெத்தம்பெட்டமைன், 6 கிராம் உயர் ரக கஞ்சா, போதை ஸ்டாம்ப், 10 செல்போன்கள், கார், டைரி பறிமுதல் செய்யப்பட்டன. விசாரணையில் அஞ்சு கிருஷ்ணா நடிகை என்பதும், வின்சி நிவேதா துணை நடிகை என்பதும், ஸ்ரீராம் கிரிக்கெட் வீரர் என்பதும் தெரிந்தது.

இதுகுறித்து போலீஸ் அதிகாரிகள் கூறுகையில், "கேரளாவைச் சேர்ந்த அல்விபின்ஷா போதைப் பொருள் மொத்த வியாபாரியாக செயல்பட்டுள்ளார். இவர் பெங்களூருவிலிருந்து கடத்தி வந்துள்ளார். இவருக்கு நைஜீரியாவைச் சேர்ந்த போதைப் பொருள் கடத்தல் கும்பலுடன் தொடர்பு உள்ளது. அந்த நாட்டைச் சேர்ந்த 30 பேரை ஏற்கெனவே கைது செய்து சிறையில் அடைத்துள்ளோம்.

இதேபோல் துணை நடிகை வின்சி நிவேதாவும் போதைப் பொருள் வியாபாரியாக இருந்துள்ளார். அவர் கண்ணாடி பவுச், மணிபர்ஸ், மேக்கப் செட் உள்ளிட்டவற்றில் சிறு பொட்டலங்களாக மறைத்து வைத்திருந்த போதைப் பொருட்களை பறிமுதல் செய்தோம்.

இவர் சினிமா துணை இயக்குநர்கள், நடன கலைஞர்கள் உட்பட பல்வேறு தரப்பினருக்கும் கடந்த 8 மாதங்களாக விற்பனை செய்துள்ளார். மேலும், இந்த கும்பல் அமெரிக்காவிலிருந்து மும்பை வழியாக உயர்ரக வலி நிவாரண மாத்திரைகளை கடத்தி வந்து போதை மாத்திரையாக விற்பனை செய்துள்ளது.

இந்த மாத்திரையை ஒருமுறை உட்கொண்டாலே அதற்கு அடிமையாகிவிடுவார்கள். சினிமா, ஐடி நிறுவனத்தினர் மற்றும் செல்வந்தர்களுக்கு இந்த மாத்திரைகள் விற்கப்பட்டுள்ளன. ஒரு மாத்திரை ரூ.3,500 வரை விலை வைத்து விற்பனை செய்துள்ளனர். இதன் பின்னணியில் உள்ளவர்கள் குறித்து தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது" என்றனர்.

## மதுரை சிலைமான் அருகே அதிமுக நிர்வாகி கொலை: மனைவியே சதி செய்தது அம்பலம்




**மதுரை, பிப்.08:** மதுரை அருகே அதிமுக நிர்வாகி வெட்டிக் கொல்லப்பட்டார். அவரது மனைவியே ஆட்களை வைத்து தீர்த்துக் கட்டியது தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக மனைவி உட்பட 3 பேரை போலீஸார் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மதுரை சிலைமான் அருகே உள்ள சாமநத்தம் கிராமத்தைச் சேர்ந்தவர் தனசேகரபாண்டியன் என்ற செந்தில் (36). திருப்பரங்குன்றம் ஒன்றிய அதிமுக இளைஞர் பாசறை துணைச் செயலாளரான இவர், சாமநத்தம் ஊராட்சி முன்னாள் துணைத் தலைவராகவும் இருந்துள்ளார். இவருக்கு மனைவி காவ்யா மற்றும் 2 குழந்தைகள் உள்ளனர்.

சாமநத்தம்-நெடுங்குளம் சாலையில் டீக்கடை நடத்தி வந்த செந்தில் நேற்று காலை 6 மணிக்கு கடையைத் திறக்கச் சென்றார். அப்போது அங்கு வந்த 5 பேர் கொண்ட கும்பல் செந்திலை அரிவாளால் வெட்டிக் கொலை செய்துவிட்டு, அங்கிருந்து தப்பியது.

தகவலறிந்து வந்த சிலைமான் போலீஸார் செந்தில் உடலை மீட்டு, பிரேதப் பரிசோதனைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து போலீஸார் தரப்பில் கூறியதாவது: செந்தில் மனைவி காவ்யா, வில்லாபுரம் பகுதியைச் சேர்ந்த கார்த்திக் என்பவருடன் பழகியுள்ளார்.

இதை செந்தில் கண்டித்ததால், கணவன், மனைவிக்கிடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது. வில்லாபுரத்தில் உள்ள காவ்யாவின் தந்தை பேச்சுவார்த்தை நடத்தி, கணவருடன் சேர்ந்து வாழுமாறு நேற்று முன்தினம் மகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கணவர், பெற்றோர் தரப்பில் தொடர்ந்து நெருக்கடி ஏற்பட்டதால், தான் பழகி வந்த கார்த்திக் மற்றும் 4 பேரைப் பயன்படுத்தி கணவரைக் கொல்ல காவ்யா திட்டமிட்டார்.

இதன்படி, நேற்று அதிகாலை கடைக்குச் சென்ற செந்திலை கார்த்திக் உட்பட 5 பேர் அரிவாளால் வெட்டிக் கொலை செய்துள்ளனர். இவ்வாறு போலீஸார் தெரிவித்தனர். மதுரை எஸ்.பி. அரவிந்த் கூறும்போது, "செந்தில் மனைவியின் தகாத பழக்கத்தால் இக்கொலை நடந்திருக்கிறது.

இது தொடர்பாக செந்தில் மனைவி காவ்யா, கார்த்திக் உட்பட 3 பேரைப் பிடித்துள்ளோம், மேலும் இருவரை தேடுகிறோம்" என்றார். அதிமுக நிர்வாகி செந்தில் கொலை தொடர்பாக கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி, அமமுக பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு மோசமான நிலையில் இருப்பதாகக் கூறி கண்டனம் தெரிவித்துள்ளதுடன், திமுக அரசை அடியோடு வீழ்த்த வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளனர்.

## ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 1500 கனஅடியாக அதிகரிப்பு

**ஒகேனக்கல், பிப்.08:** கர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது. இந்த நிலையில் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து நேற்று 1200 கனஅடியாக வந்தது.

காவிரி நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்தது. இதனால் இன்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து 1500 கனஅடியாக குறைந்து வந்தது. இதனால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

இதனால் சுற்றுலாப் பயணிகள் பரிசல் பயணம் செய்து காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர். மேலும் அவர்கள் தொங்கு பாலத்தில் நின்று காவிரி ஆற்றில் பாறைகளுக்கு நடுவே விழும் தண்ணீரை ஆர்வமுடன் ரசித்து மகிழ்ந்தனர். பின்னர் மெயின் அருவியில் குளித்தும், பெண்கள் ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர்.

சுற்றுலாப் பயணிகள் மீன் சாப்பாடு வாங்கி கொண்டு பூங்காவில் அமர்ந்து சாப்பிட்டு மகிழ்ந்தனர். நீர்வரத்தை தமிழக-கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## திருப்போரூர் கோவிலுக்கு சொந்தமான ரூ.700 கோடி மதிப்பிலான நிலங்கள் மீட்பு



**திருப்போரூர், பிப்.08:** திருப்போரூரில் உள்ள புகழ்பெற்ற கந்தசாமி கோவிலுக்கு சொந்தமாக சுமார் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்கள் உள்ளன. இதில் சுமார் 240 ஏக்கர் நிலம் தனிநபர்களிடம் இருப்பதாகவும் அதனை மீட்டு கோவில் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர சென்னையை சேர்ந்த வக்கீல் ஒருவர் வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு கோவில் நிலத்தை மீட்க உத்தரவிட்டது.

ஆனால் பல்வேறு காரணங்களால் இந்த பணி தாமதமானதால் கோர்ட்டு அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது.

இதையடுத்து 21 நாட்களுக்குள் கோவில் நிலங்களை மீட்க கோர்ட்டு உத்தரவிட்டது. இதையடுத்து கடந்த மாதம் 31-ந்தேதி பலத்த போலீஸ் பாதுகாப்புடன் அறநிலையத்துறை மற்றும் வருவாய்துறை அதிகாரிகள் இணைந்து நிலத்தை மீட்க வந்தனர்.

அப்போது, தற்போது நிலங்களை வைத்திருப்பவர்கள், விவசாய சங்கத்தினர், சில கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் எதிர்ப்பு தெரிவித்து கோவில் நிர்வாகம் எடுத்து வந்த அறிவிப்பு பலகைகளை உடைத்து, பேனர்களை கிழித்து வாக்குவாதம் மற்றும் மறியலில் ஈடுபட்டனர். ஆனால் முன்னதாக சுமார் 40 ஏக்கர் நிலங்களை அதிகாரிகள் மீட்டு அறிவிப்பு பலகை வைத்தனர்.

பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தையில் அவர்களின் கோரிக்கையை ஏற்று கோர்ட்டை நாடி உரிய உத்தரவு வாங்கி வர நேற்று வரை கால அவகாசம் அதிகாரிகள் தரப்பில் வழங்கப்பட்டது. நேற்றுடன் கால அவகாசம் முடிந்ததால் நிலங்களை மீட்க நேற்று இரவு அதிகாரிகள் ஆலோசித்தனர்.

இதை தொடர்ந்து இன்று அதிகாலை 5.30 மணிக்கு திருப்போரூர் இன்ஸ்பெக்டர் ராஜாங்கம் தலைமையில் சுமார் 100-க்கும் மேற்பட்ட போலீசார் கோவில் அருகில் திருப்போரூர்-நெம்மேலி செல்லும் சாலையில் குவிக்கப்பட்டனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் இந்து சமய அறநிலைத்துறை உதவி ஆணையர்கள் கார்த்திகேயன், ராஜலட்சுமி, ஆகியோர் தலைமையில் வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், திருப்போரூர் வட்டாட்சியர் சரவணன் கோவில் செயல் அலுவலர் குமரவேல், மேலாளர் வெற்றிவேல் மற்றும் கோவில் ஊழியர்கள் உதவியுடன், காலை 6 மணிமுதல் ஒவ்வொரு இடமாக மீட்டு அங்கு கோவில் சார்பில் அறிவிப்பு பலகையை வைத்தனர்.

இன்று காலை மட்டும் ஆக்கிரமிப்பில் இருந்த சுமார் 200 ஏக்கர் நிலங்களை அதிகாரிகள் மீட்டது குறிப்பிடத்தக்கது. மீட்கப்பட்ட சுமார் 240 ஏக்கர் நிலத்தின் தற்போதைய மதிப்பு ரூ.700 கோடி இருக்கும் என கூறப்படுகிறது. கோவில் சார்பில் அறிவிப்பு பலகை வைக்கப்பட்ட இடத்தில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## பறவைக் காய்ச்சல் எதிரொலி- கோழிப்பண்ணைகளில் தீவிர பாதுகாப்பு நடவடிக்கை

**சென்னை, பிப்.08:** சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் இறந்த காகங்களை பறவைக் காய்ச்சல் தாக்கியுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது பறவைகளிடையே விரைவாகப் பரவக்கூடியது. பறவைக் காய்ச்சலை உருவாக்கும் எச்5என்1 வைரஸ் கிருமிகள் குறிப்பாக இடம் விட்டு இடம் பறக்கும் புறா, காகம், கொக்கு, நாரை போன்ற பறவைகளால் அதிகமாக பரப்பப்படுகிறது.

மேலும், அவை வீடுகள் மற்றும் பண்ணைகளில் வளர்க்கப்படும் வாத்துகள் மற்றும் கோழிகளுக்கும் பரவுகிறது. சில நேரங்களில் மனிதர்கள் மற்றும் பிற பாலூட்டிகளிலும் பரவக்கூடும்.

தொற்றுநோய் பரவலைத் தடுக்க தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை, மாநிலம் முழுவதும் கண்காணிப்பை மேம்படுத்தவும், பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் உத்தரவிட்டுள்ளது.

நாமக்கல், சேலம், ஈரோடு உள்பட நாமக்கல் மண்டலத்தில் சுமார் 1,000 கோழிப்பண்ணைகளில் 6 கோடிக்கும் அதிகமான முட்டை கோழிகள் வளர்க்கப்படுகின்றன. 2 கோடிக்கும் அதிகமான பிராய்லர் கோழிகள் வளர்க்கப்படுகின்றன.

இந்த நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கோழிப் பண்ணைகளில் வெளியாட்கள் மற்றும் வாகனங்கள் நுழைவதற்கு தடை செய்யப்பட்டு, உயிரி பாதுகாப்பு (பயோ செக்யூரிட்டி) நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர். பண்ணை வளாகங்களில் கிருமி நாசினி மருந்துகள் தெளிக்கப்படுகிறது.

நாமக்கல் மண்டலத்தில் சுகாதாரமான முறையில் கோழிப்பண்ணைகளை அமைத்து நடத்தி வருவதாலும், சென்னையில் இருந்து நாமக்கல்லுக்கோ, நாமக்கல்லில் இருந்து சென்னைக்கோ கோழிப்பண்ணை சம்மந்தமான முட்டை, தீவனம் போன்ற பொருட்கள் போக்குவரத்து நடைபெறுவதில்லை.

இதனால் நாமக்கல் மண்டலத்தில் பறவைக்காய்ச்சல் தொற்றுநோய் பரவ வாய்ப்பில்லை என பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## திருவேற்காடு கருமாரியம்மன் கோவில் குடிநீர் மிஷினில் கிடந்த பல்லி, பூச்சிகள்- பக்தர்கள் அதிர்ச்சி



**திருவேற்காடு, பிப்.08:** திருவேற்காட்டில் மிகவும் பிரசித்தி பெற்ற தேவி கருமாரியம்மன் கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் பக்தர்களின் தாகத்தை தீர்க்க சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் எந்திரம் வைக்கப்பட்டுள்ளது. இதனால் தினந்தோறும் கோவிலுக்கு வரும் பக்தர்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் எந்திரத்தின் தண்ணீரை பயன்படுத்தி வருகின்றனர்.

இதற்கிடையே, தை மாத கடைசி வெள்ளிக்கிழமையான நேற்று அதிக அளவில் பக்தர்கள் வந்திருந்தனர். அப்போது கோவிலில் வைக்கப்பட்டுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் எந்திரத்தில் அட்டைப்பூச்சி, பல்லி, பாசிகள் இருப்பதை கண்ட பக்தர் ஒருவர், அதனை வீடியோ எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு உள்ளார். அந்த வீடியோ வைரலாக பரவியது.

சுகாதாரமற்ற நிலையில் உள்ள அந்த தண்ணீரை கோவிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் குழந்தைகள் குடிப்பதால் அசம்பாவிதம் ஏற்படுவதற்கு முன்பு அதனை பராமரிக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

## கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்கட்டமைப்புகளின் பராமரிப்பு பணிக்கு சிட்கோ-மாநகராட்சி ஒப்பந்தம்



**சென்னை, பிப்.08:** கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளின் சாலை, மின்விளக்கு, திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட உள்கட்டமைப்புகளின் பராமரிப்பு பணிகளை மாநகராட்சி மேற்கொள்ளும் வகையில் சிட்கோவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (சிட்கோ) கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில் ஏராளமான தொழிற்சாலைகள் உள்ளன.

இங்கு லட்சக்கணக்கானோர் பணிபுரிகின்றனர். இந்த நிலையில், தொழிற்பேட்டைகளின் உள்கட்டமைப்புகளை பராமரிக்க, சென்னை மாநகராட்சி சார்பில் சிட்கோவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அம்பத்தூர் தொழிற்பேட்டை 1,167 ஏக்கர் பரப்பு கொண்டது. இங்கு 41.38 கி.மீ. நீளத்தில் 128 சாலைகள், 1,558 தெரு விளக்குகள், 8 உயர்கோபுர மின்விளக்குகள், 84 கி.மீ. நீள மழைநீர் வடிகால்கள் உள்ளன. இங்கு தினமும் 40 இடங்களில் குப்பை சேகரமாகின்றது.

கிண்டி தொழிற்பேட்டை 404.08 ஏக்கர் பரப்பு கொண்டது. இங்கு 15.28 கி.மீ. நீளத்தில் 82 சாலைகள், 344 தெரு விளக்குகள், 2 உயர்கோபுர மின் விளக்குகள், 23.50 கி.மீ. நீள மழைநீர் வடிகால்கள் உள்ளன. இங்கு தினமும் 20 இடங்களில் குப்பை சேகரமாகின்றது.

தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் அம்பத்தூர், கிண்டி தொழிற்பேட்டைகளில் உள்ள சிட்கோவின் உட்கட்டமைப்புகள் மாநகராட்சி சார்பில் பராமரிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஊஞ்சவேலாம்பட்டி அருகே காலியிடத்தில் சருகுகளில் பரவிய தீ





**பொள்ளாச்சி, பிப்.08:** பொள்ளாச்சி அருகே உள்ள பல்வேறு கிராமங்களில், பழை குறைவால் ஆங்காங்கே செடிகள் காய்ந்து சருகுகளாக கிடக்கிறது. ஆனால் சில நேரத்தில், அந்த பகுதியில் தீ விபத்து உள்ளிட்ட விபரீதம் சம்பவம் நடைபெறுகிறது.

இதில், உடுமலை ரோடு ஊஞ்சவேலம்பட்டியில் உள்ள ஒரு தனியார் காலியிடத்தில் கடந்த சிலநாட்களாக வெயிலுக்கு, அங்கிருந்த செடி, கொடிகள் சருகு போல் இருந்துள்ளது. அதனை அப்புறப்படுத்தாமல் போடப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று திடீர் என அப்பகுதியில் தீப்பற்றியது.

அமெரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படும் தானியங்கள், பாதாம், முந்திரிக்கு வரி விலக்கு: வர்த்தக ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள்'

பாகிஸ்தான் மசூதியில் பயங்கரம் மனித வெடிகுண்டு தாக்குதலில் 31 பேர் பலி: 169 பேர் படுகாயம்'

சுமார் 2 ஏக்கர் பரப்பளவு காலியிடத்தில் காய்ந்த செடி கொடிகள் மற்றும் சருகுகள் வேகமாக எரிந்ததால், அப்பகுதி முழுவதும் புகை மூட்டமானது. சில சமயத்தில் சுமார் 30 அடிவரை தீ எரிந்ததால், ரோட்டில் சென்றவர்கள் அச்சமடைந்தனர். மேலும், எரிந்த தீயிலிருந்து துகள்கள் வெளியேறி பறந்ததால், பாதசாரிகள் மற்றும் இருசக்கர வாகனத்தில் சென்றவர்கள் அவதிப்பட்டனர்.

சுமார் 2 மணி நேரத்திற்கு பிறகே, அந்த தீ கட்டுக்குள் வந்தது. இருப்பினும், ரோட்டோரம் இருந்த காலியிடத்தில் சருகுகளில் தீ எரிந்து பொது மக்களின் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து, தீயணைப்புத்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவத்தால் அப்பகுதியினரிடம் பரபரப்பு நிலவியது.

## பெரம்பலூர் அருகே டிரான்ஸ்பார்மரில் காப்பர் கம்பிகள் திருட்டு



**பாடாலூர், பிப்.08:** பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா புதுக்குறிச்சி துணை மின் நிலையத்துக்குட்பட்ட கொளக்காநத்தம்-சாத்தனூர் சாலையில் காட்டுப்பகுதியில் ஒருடன் எடை கொண்ட டிரான்ஸ்பார்மர் உள்ளது. இங்கிருந்து விவசாய வயல்களுக்கு மின் இணைப்பு செல்கிறது.

இந்நிலையில் நேற்றிரவு மர்ம நபர்கள் இந்த டிரான்ஸ்பார்மரை இடித்து தள்ளி சேதப்படுத்தினர். இதனால் மின் இணைப்பு கூட்டானது.

அதன் பின்னர் டிரான்ஸ்பார்மரிலிருந்த 75 கிலோ காப்பர் கம்பிகள், 225 லிட்டர் டிரான்ஸ்பர் ஆயிலை திருடி சென்று விட்டனர்.

தகவலறிந்து வந்த கொளக்காநத்தம் மின் வாரிய உதவி செயற்பொறியாளர் வேல்முருகன், தனிப் பிரிவு ஏட்டு சுரேஷ் சம்பவ இடத்தை பார்வையிட்டனர்.

மேலும் கைரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. தொடர்ந்து டிரான்ஸ்பார்மரை சீரமைக்கும் பணி நடந்து வருகிறது.

இதுகுறித்து மருவத்தூர் போலீசார் வழக்கு பதித்து மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.



சத்சங்கம் & விசேஷ கூட்டுப் பிரார்த்தனை
தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் நேற்று (06.02.2026) வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் அருளாசியுடன் ஸ்ரீ ஸ்வாமிஜின் சீடர் ஸ்ரீ முரளீஜி அவர்களின் சத்சங்கம் & விசேஷ கூட்டுப் பிரார்த்தனை சிறப்பாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், தஞ்சை நாமத்வார் மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

# மின் இணைப்பு வழங்க லஞ்சம்: மின்வாரிய அதிகாரி கைது!

**ஆவடி, பிப்.08:** ஆவடியில் மின் இணைப்பு வழங்க ரூ.15,000 லஞ்சம் வாங்கிய வழக்கில் மின்வாரிய வருவாய் மேற்பார்வையாளரை ஊழல் தடுப்புத்துறை போலீஸார் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

ஆவடி கோவில்பதாகை பொண்ணப்பிள்ளை நகரைச் சேர்ந்தவர் விவசாயி ராகவன் (47). இவர் இதே பகுதியில் புது வீடு கட்டி வருகிறார். இந்த வீட்டிற்கு மின் இணைப்பு கோரி கோவில்பதாகை மின்வாரிய அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார்.

இதனை பரிசீலனை செய்த மின்வாரிய வருவாய் மேற்பார்வையாளர்சென்னை வியாசர்பாடியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியன் (47) என்பவர், மின் இணைப்பு வழங்க ரூ.15,000 லஞ்சம் தர வேண்டும் என ராகவனிடம் கேட்டுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த ராகவன், பணத்தை கொடுக்க விரும்பாமல் திருவள்ளூர் ஊழல் தடுப்புத்துறை போலீஸாரிடம் புகார் அளித்தார். காவல் துணை கண்காணிப்பாளர் ஜெயக்குமார் தலைமையில் போலீஸார் ரசாயன பவுடர் தடவிய லஞ்சப் பணத்தை ராகவன் கொடுத்து பாலசுப்பிரமணிடம் கொடுக்குமாறு அறிவுறுத்தினர்.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை பிற்பகல் ராகவன் கோயில்பதாகை மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று பாலசுப்பிரமணியனிடம் லஞ்சப் பணத்தை கொடுத்துள்ளார்.

அதனை அவர் வாங்கிய போது, மறைந்திருந்த காவல் துணை கண்காணிப்பாளர் ஜெயக்குமார், ஆய்வாளர் மாலா ஆகியோர் தலைமையில் போலீஸார் கையும் களவுமாக பாலசுப்பிரமணியத்தை கைது செய்தனர். தொடர்ந்து போலீஸார் அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வைகை அணையில் இருந்து பாசனத்திற்கு திறக்கப்பட்ட தண்ணீர் முற்றிலும் நிறுத்தம்



**ஆண்டிபட்டி, பிப்.08:** தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகில் உள்ள 71 அடி உயரம் கொண்ட வைகை அணையில் இருந்து மதுரை, தேனி, திண்டுக்கல், ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களுக்கு குடிநீர் மற்றும் பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக வைகை அணையின் நீர்பிடிப்பு பகுதியில் மழை முற்றிலும் நின்ற நிலையில் முல்லைப்பெரியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் மட்டுமே நீர்வரத்தாக இருந்து வந்தது.

ஆனால் பெரியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவும் குறைக்கப்பட்டதால் நீர்வரத்து தொடர்ந்து சரிந்தது.

இதனால் அணையின் நீர்மட்டம் 45 அடியாக குறைந்தது. வைகை அணையில் இருந்து முறைநீர் பாசனம் மூலம் தண்ணீர் 300 கன அடி வெளியேற்றப்பட்டது. இன்று காலை முதல் பாசனத்திற்காக திறக்கப்பட்ட தண்ணீரின் அளவு முற்றிலும் நிறுத்தப்பட்டு மதுரை, திருமங்கலம், சேடப்பட்டி குடிநீர் தேவைக்காக மட்டும் 69 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 45.80 அடியாக உள்ளது. வரத்து 442 கன அடி. இருப்பு 1489 மி.கன அடி.

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 121.90 அடியாக உள்ளது. வரத்து 24 கன அடி. திறப்பு 700 கன அடி. இருப்பு 3004 மி.கன அடி. மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 47.10 அடியாகவும், சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 121.36 அடியாகவும், சண்முகாநதி அணையின் நீர்மட்டம் 26.25 அடியாகவும் உள்ளது.

# பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம்



**மதுரை, பிப்.08:** மதுரை மாவட்டம் மதுரை கிழக்கு ஒன்றியம் எல் கே பி நகர் அரசு நடுநிலைப் பள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் தலைவர் தஸ்லீம் பானு தலைமையில் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் தென்னவன் முன்னிலை வகித்தார். ஆசிரியை அருவகம் வரவேற்றார்.


எண்ணும் எழுத்தும் திட்டம், திறன் திட்டம், எல்லா குழந்தைகளும் பள்ளியில், உள்ளடக்கிய கல்வி, ஆண்டு விழா, பெண் கல்வி, உயர் தொழில்நுட்ப வகுப்பறையில் மதிப்பீடு, மன்ற செயல்பாடுகள், சிறார் திரைப்படம், வானவில் மன்றம், மருத்துவ முகாம், இடை நின்ற மாணவர்கள், மகிழ் முற்றம், குழந்தைகளுக்கான விழிப்புணர்வு தொலைபேசி எண்கள் 1098, 14417, புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டிடங்கள், போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு, சுற்றுச்சுவர் பழுது பார்ப்பு, கழிப்பறை தேவை ஆகியவை குறித்து கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

கூட்டத்தில் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், கல்வியாளர்கள், முன்னாள் மாணவர்கள், பெற்றோர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

ஆசிரியை விஜயலட்சுமி நன்றி கூறினார்.

## வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு சந்தன காப்பு, கிளி பூஜை சிறப்பு வழிபாடு......






வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தை 4-ஆம் வெள்ளியை முன்னிட்டு கணேஷ் ஐயர், பாலசுப்ரமணி ஐயர், யாகேஷ் அவர்களால் மூலவர், உற்சவர், ஆதியம்மன் அனைத்து தெய்வங்களுக்கும் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், மூலவர் கன்னிகா பரமேஸ்வரி அம்மனுக்கு மீனாட்சி அம்மனாக சந்தன காப்பு சாற்றி சிறப்பு அலங்காரம், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், ஆர்ய வைஸ்ய மகளிர் லலிதா சஹஸ்ரநாமம் பாராயணம், கணபதி பூஜையும் கிளி பூஜையும், மங்கள வாத்தியங்கள் முழங்க, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுக்கள் பாடி ஆரத்தி காண்பித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. (சிலக )கிளி பூஜை மகிளா சபாவினர் மிகச் சிறப்பாக பூஜைகள் செய்திருந்தார்கள்.

# விவேகானந்தரின் அறிவுரைகளை மாணவர்கள் பின்பற்ற வேண்டும்

## உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்

**மதுரை, பிப்.08:** விவேகானந்தரின் அறிவுரைகளை மாணவ, மாணவிகள் பின்பற்றினால் வாழ்வில் முன்னேற்றம் அடையலாம் என சென்னை உயா்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ஜி.ஆா். சுவாமிநாதன் தெரிவித்தாா்.



சென்னை விவேகானந்தா் இல்லத்தில், விவேகானந்தா நவராத்திரி விழா 9 நாள்கள் நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை தொடங்கியது. தொழிலதிபா் கே.நல்லி குப்புசாமி, பாரதிய வித்ய பவன் இயக்குநா் கே.என். ராமசாமி ஆகியோா் வாழ்த்துரை வழங்கினா்.

இதில் சென்னை உயா்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ஜி.ஆா். சுவாமிநாதன் தலைமை விருந்தினராக பங்கேற்றுப் பேசியதாவது: இறை நம்பிக்கை, தன்னம்பிக்கையை மாணவா்கள் கொண்டிருக்க வேண்டும். விவேகானந்தா் வாழ்க்கை குறித்து நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அதன்படியே பின்பற்ற வேண்டும். நற்பண்புகள் கொண்ட அனைவரும் நல்ல நிலையில் உள்ளனா். துறவிகள் பொதுமக்களுக்காகவும், மாணவ-மாணவிகளுக்காகவும் தங்களது சிறந்த பணிகளை ஆற்றி வருகின்றனா். மாணவ, மாணவிகள், விவேகானந்தா், புத்தா் உள்ளிட்ட பெரிய மகான்களின் வாழ்வின் முறைகள், அறிவுரைகளைப் பின்பற்றினால் வாழ்வில் உச்சத்தை அடைய முடியும் என்றாா்.

இதில், ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைவா் சுவாமி சத்யஞானானந்தஜி, மேலாளா் சுவாமி ரகுநாயகானந்தா், விவேகானந்தா் இல்ல பொறுப்பாளா் சுவாமி ஈஷபிரேமானந்தா் மற்றும் ராமகிருஷ்ண பள்ளி மாணவ, மாணவிகள் உள்ளிட்டோா் பங்கேற்றனா்.

முன்னதாக ஸ்ரீ ராமகிருஷ்ண பள்ளி மாணவிகளின் இசை நிகழ்ச்சி, திவாகா் குழுவினரின் இசை நிகழ்ச்சி, சுவாமி சங்கராத்மானந்தா் தொடக்கப் பாடல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்சிகள் நடைபெற்றன.




# ஆட்சியிலும் பங்கு அதிகாரத்திலும் பங்கு என்பது த.வெ.க.-வின் கொள்கை முடிவு- அருண்ராஜ்



**சென்னை, பிப்.08:** ஆட்சியில் பங்கு என அறிவித்தும் கூட்டணிக்கு கட்சிகள் வரவில்லையே என்ற கேள்விக்கு தவெக கொள்கை பரப்பு பொதுச்செயலாளர் விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அருண்ராஜ் கூறியதாவது:-

ஆட்சியிலும் பங்கு அதிகாரத்திலும் பங்கு என்பது தவெகவின் கொள்கை முடிவு. கூட்டணிக்கு கட்சிகள் வருவார்கள் என எண்ணி அந்த அறிவிப்பை வெளியிடவில்லை.

கொள்கை முடிவு என்பதால் தான் முதல் மாநாட்டிலேயே விஜய் அறிவித்தார். இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழக மக்கள் மீண்டும் தி.மு.க.விடம் ஏமாறமாட்டார்கள்- ஜி.கே.வாசன்



**மதுரை, பிப்.08:** மதுரை அழகர்கோவில் ரோட்டில் உள்ள தமிழ்நாடு ஓட்டலில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ஜி.கே. வாசன் தலைமையில் தென்மண்டல மாவட்ட தலைவர்கள், நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மற்றும் சட்டமன்ற தேர்தலுக்கான விருப்பமனு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது நிருபர்களிடம் கூறியதாவது:-

தமிழக மக்கள் ஆட்சி மாற்றத்திற்கு தயாராக உள்ளார்கள். தி.மு.க. அரசு கொடுத்த தேர்தல் வாக்குறுதிகள் 70 சதவீதம் நிறைவேற்றவில்லை. ஆட்சி முடியும் போது தி.மு.க. அரசு புதிய திட்டங்களை அறிவித்து மக்களை ஏமாற்றுவது தொடர் கதையாகி வருகிறது. புதிய அறிவிப்புகளை வெளியிடுவது மக்களை முகம் சுழிக்கும் அளவில் தான் உள்ளது.

தமிழக மக்கள் மீண்டும் தி.மு.க.விடம் ஏமாற மாட்டார்கள் என்று நினைக்கிறேன். தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு குற்ற சம்பவங்கள் அதிகரித்து தான் உள்ளது. விஜயின் த.வெ.க.வுக்கு கட்சிக்கு ஒவ்வொரு வரும் ஒவ்வொரு சதவீதம் வாக்குகள் கிடைக்கும் என சொல்லி வருகிறார்கள். யாரும் 10 சதவீதம் குறைவாக சொல்லவில்லை.

சட்டமன்ற தேர்தலில் தொகுதி பங்கீடு தொடர்பாக பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. கூட்டணியில் தலைமை வகிக்கும் கட்சி தான் எங்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய வேண்டும். தேசிய அளவில் மோடி தலைமையிலான என்.டி.ஏ. கூட்டணியில் சந்திர பாபு நாயுடு, நிதிஷ் குமார் உள்ளிட்டோர் உள்ளனர்.

தமிழகத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான என்.டி.ஏ. கூட்டணியில் பாஜக, த.மா.க உள்ளிட்ட கட்சிகள் உள்ளது அவ்வளவு தான் வித்தியாசம் என்றார்.

# சசிகலாவை சந்தித்த அ.ம.மு.க நிர்வாகி கட்சியில் இருந்து நீக்கம்



**சென்னை, பிப்.08:** சசிகலாவை சந்தித்த நிர்வாகியை கட்சியில் இருந்து நீக்கி அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுகுறித்து அமமுக வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கழகத்தின் கொள்கை குறிக்கோள்களுக்கும், கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டதாலும், கழகத்தின் கண்ணியத்திற்கு மாசு ஏற்படும் வகையில் நடந்து கொண்டதாலும், கழகக் கட்டுப்பாட்டை மீறி கழகத்திற்கு களங்கமும், அவப்பெயரும் உண்டாகும் விதத்தில் செயல்பட்ட காரணத்தினாலும், கழக மாணவியர் அணி செயலாளர் பி.ஜீவிதா நாச்சியார் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் இன்று முதல் நீக்கி வைக்கப்படுகிறார்.

கழக உடன்பிறப்புகள் யாரும் இவருடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com